# திறவுகோல்

2050 ஆவணி

மாத இதழ்



சோழ தேசமும் பெருவுடையாரும்!

நீரியல் பிழையாண்மை

ஒளிரும் ஆசிரியர் - 4

என் மகள் (பகுதி 4)

ஆண் தேவதைகள்

செண்பக வனம்

வெளியீடு

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.


குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 15)



# செண்பக வனம்

சோழ நாட்டு இளவரசி மாதங்கிதேவி தன் தங்கை குந்தவியை தன்னுடன் அழைத்து சென்று செம்பியன் மாதேவிகளுடன் நிற்பதை கண்ட பல்லவ நாட்டு இளைஞனுக்கு அவர்கள் யார் என்று தெரிந்துகொள்ள ஆவல் கொதித்தது. தனக்கு அதுவரை பதிலளித்து கொண்டிருந்தவன் சென்று விட்டமையால் அதற்கு அடுத்தாற்போல் நின்றவனின் தோளை சுரண்டி ‘‘ அண்ணா அதோ அங்கே செம்பியன்மாதேவி அடிகளின் அடுத்தாற்போல் நிற்கும் அழகிய பெண்கள் யார்?‘‘ என்றான்.

‘‘தம்பி நீ என்ன தஞ்சைக்கு புதுசா?
அவர்கள் தான் இந்நாட்டு இளவரசிகள் . யுவராசர் அருள்மொழி தேவரின் மூத்தமகளும் இளையமகளும் அவரது பாட்டியாரோடு நிற்கிறார்கள்‘‘. என்றார் அவனுக்கு பக்கத்தில் நின்ற ஆசாமி.

‘‘அண்ணா இன்னும் ஒரே ஒரு கேள்வி கோபித்துக் கொள்ளாமல் பதில் சொல்லுங்கள்’’ இளவரசர் மதுராந்தகர் எங்கே? அவரை இங்கு காணவே இல்லையே?

‘‘தம்பி நீ எந்த இளவரசர் மதுராந்தகரை கேட்கிறாய்? சக்கரவர்த்தி உத்தம சோழரின் மகன் மதுராந்தகரை கேட்கிறாயா?

அல்லது அருண்மொழித் தேவரின் மகன் மதுராந்தகரை கேட்கிறாயா?’’

‘‘அருண்மொழிதேவரின் மகனான மதுராந்தகரை தான் காண வேண்டும் அண்ணா.’’

‘‘அது என்னப்பா, உனக்கு இவரை மட்டும் காண வேண்டும் என்று சொல்கிறாய்?’’

‘‘இல்லை அண்ணா இவர் பார்ப்பதற்கு ஆதித்த கரிகாலர் போலவே இருப்பதாகவும்

அவரை போலவே வாள்வீச்சில் இவரையும் வெல்வது மிக கடினம் என்று நாடு முழுக்க புகழ்கிறார்கள். அப்படி பேறு பெற்ற சோழ இளவரசரை பார்க்க வேண்டாமா அண்ணா, அதுமட்டுமில்லாமல் நான் சக்கரவர்த்தி உத்தம சோழனின் மகனான மதுராந்தகரை திருவண்ணாமலையில் தரிசித்துவிட்டு தான் வருகிறேன் அண்ணா !‘‘

‘‘தம்பி நீ சொல்வது முழுக்க சரிதான் இவர் பார்ப்பதற்கு ஆதித்த கரிகாலர் போலத்தான் இருப்பார். அதனாலேயே என்னவோ வந்தியதேவர் இங்கு வந்தால் மதுராந்தகர் அவரை விட்டு பிரியவே மாட்டார். கொஞ்சம் பொறு, இருவரும் ஒன்றாகத்தான் வருவார்கள் கோட்டைக்குள் பார்க்கலாம் ‘‘. ஆமாம் உன் பெயர் என்ன? தம்பி..

‘‘செந்தில்குமரன் அண்ணா .
என்னை சிலர் செந்தில் என்று அழைப்பார்கள். என் தந்தை என்னை குமரா என்று செல்லமாக அழைப்பார்.‘‘

இவர்களின் பேச்சுக்களுக்கு நடுவே நாம் சின்னவர் களத்தை மறந்துவிட்டோம், வாருங்கள் அங்கு செல்வோம் !

சின்னவர் களத்தின் நடுநாயகமாய் நின்றிருந்த காட்சி மேடையில் சின்ன பழுவேட்டரையர் அமர்ந்திருக்க யாரோ மேலே ஏறி வரும் சப்தம் கேட்டு வாயிலை நோக்கினார். அங்கு வந்திருப்பது அனிருத்த பிரம்மராயர் என்று அறிந்தவுடன் சற்று தூக்கி வாரிப்போட்டது சின்ன பழுவேட்டரையர்க்கு..
‘‘வாருங்கள், வாருங்கள், சோழகுல அமைச்சரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். வாருங்கள், வாருங்கள் நீங்கள் ஒரு ஓலை அனுப்பி இருந்தாலோ யாரிடமேனும் சொல்லிவிட்டு இருந்தாலோ நானே வந்திருப்பேன், ஏன் உங்களுக்கு இப்படி சிரமம் என்றார் பழுவேட்டரையர்.’’ ‘‘நீங்களே வந்திருப்பதால் காரியம் சற்று ஏதோ விபரீதம் என்று புரிகிறது முதலில் வாருங்கள் அமருங்கள்’’ என்று தனக்கு அடுத்தாற்போல் உள்ள இருக்கை காட்டினார் பழுவேட்டரையர்.

‘‘ஆமாம் காரியம் சற்று விபரீதம் தான்,
அது இருக்கட்டும் உங்களை பார்த்து பல நாட்கள் ஆகிவிட்டது ஏன் கோட்டைக்குள் வருவதில்லை? எப்படி இருக்கிறீர்கள் .?’’
என்று கேட்டுக் கொண்டே தனது இடைக்கச்சையில் வைத்திருந்த பொருட்கள் எல்லாவற்றையும் தன் முன்னால் இருந்த மேடையில் கொட்டினார்.

‘‘திருமலையும் மாணிக்கமும் இன்று வந்திருப்பார்களே, ஏதும் உங்களிடம் கூறினார்களா?’’ என்று கேட்டார் அனிருத்தர்.

ஆமா திருமலையும் மாணிக்கமும் வந்தார்கள். ஆனால் அவர்கள் வேறு ஏதும் சொல்லவில்லையே, ஏன் என்ன விசயம் அமைச்சரே?

இரண்டு நாட்களுக்கு முன்பு வந்தியதேவர்க்கு செண்பகவனத்தில் ஒரு கொலை முயற்சி நடைபெற்றது. அதனை மிக சாதுரியமாக மாணிக்கமும் அவன் வளர்த்த புலியும் சேர்ந்து தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். அன்று இரவே மாணிக்கம், அவன் வீட்டிலிருந்து அதே சதிகாரர்களால் கடத்தப்பட்டு இருக்கிறான். ஆனால் மிக சாதுரியமாக அங்கு இருந்தும் தப்பித்துக் கொண்டு அந்தக் கூட்டத்திலிருந்து ஒருவரை கைது செய்து அழைத்து வந்தார்கள்.
எதேர்ச்சையாக நடந்ததோ,
தெய்வாதீனமாக நடந்ததோ தெரியாது. ஆனால் அவர்கள் கைது செய்து அழைத்து வந்தவன் ரவிதாசன், அவன் இடைகட்சையிலிருந்த பொருட்கள் தான் இவை''.என்று சுட்டிக்காட்டிய அனிருத்தர்.

''இதோ இந்த மூன்று குச்சிகளில் ஏதோ ஒரு சூட்சமம் மறைந்திருக்கிறது, அதைத்தான் அறிய வேண்டும் எங்கே உனது காரைக்கால் மாணவன் அவன் நல்ல அறிவாளி அவன் பெயர் எனக்கு நினைவிற்கு வர மாட்டேன் என்கிறது.'' என்றார் அனிருத்தர்.

''மாரிராசன் அவன் பெயர் ஆனால் அவனும் அவசர வேலையாக வெளியே சென்றிருக்கிறார். இன்றோ நாளையோ வரவேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே மேசையில் உள்ள பொருட்களை ஆராய தொடங்கினார் பழுவேட்டரையர்.

இவர்களின் உரையாடலுக்கு நடுவே யாரோ காட்சி மேடைக்கு மேலே ஏறி வரும் சப்தம் கேட்க இருவருமாக சேர்ந்து வாயிலை நோக்க மாரிராசன் அங்கே உள்ளே நுழைந்தார் ''அடடே உனக்கு இறப்பே கிடையாது மாரி ராசா ! '' என்று மனதார வாழ்த்தி வரவேற்றார் பழுவேட்டரையர்.

குருவே மிக்க நன்றி ஆனால் இது வரமா ? சாபமா ? சோழ நலனுக்காக அடுத்தநொடி நான் இறப்பினும் அதுவே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியே .''
''சோணாட்டு பெரும் அமைச்சர் அனிருத்த பிரம்மராயர் வந்தனங்கள்''
என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது மாரிராசனின் கண்கள் மேசை மீது படர்ந்தது அங்கேயே கிடந்த மூன்று குச்சிகளை கண்டவன் அதில் ஒன்றை எடுத்து முகர்ந்தார் பின் தன் குத்துவாள் உறையின் இருந்த மெல்லிய உலோக பட்டை ஒன்றை லாவகமாக எடுத்தார். அதை வைத்து குச்சிகளை அணு அணுவாக சோதித்தான் அந்த காட்சிமேடையே பெரும் அமைதி குடிகொண்டது.
ஒன்றன்பின் ஒன்றாக அந்த மூன்று குச்சிகளையும் எடுத்து பார்த்தார் பின்பு இரண்டு கீழே வைத்துவிட்டு ஒரு குச்சியை மாத்திரம் எடுத்து அதனை அணுஅணுவாக தன் கையில் உள்ள சிறிய உலோகத்தின் மூலம் சுரண்டிக் கொண்டே சென்றான் .
ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு செல்வதற்கு சற்று முன்பே ஒரு இடத்தில் அது தடைபட்டு வெள்ளையாக ஏதோ ஒன்று அந்த உலோகபட்டையில் ஒட்டியது . அந்த இடத்தை சுற்றியே மெல்ல மெல்ல சுரண்டி பார்த்ததில் அது ஒரு அடைப்பு போல்

தோன்ற அதனை மெல்ல பிடித்து திருகி திறந்து எடுத்தார். அந்தக் குச்சியிலிருந்து ஒரு சுருள் ஒன்று வெளியே விழுந்தது அதேபோல மற்ற இரண்டு குச்சிகளில் இருந்தும். உள்ளே உள்ள சுருள்களை வெளியே எடுத்தார்கள். .

மூன்று சுருள்களும் மூன்று ஓலைகள்

மூன்று ஓலைகளும் .
மூன்று சதிகார திட்டங்கள்......

தொடரும்..........

---

# இது சுதந்திரமா?

இரத்தம் சிந்தி, செக்கு இழுத்து, கொடி
காத்து
போராட்டங்கள் வெடிக்க அடிமை
பயணத்தில்
இரவில் ஓர் அழகிய விடியலாய்
நம்மவர்கள் பெற்றது சுதந்திரம்

இந்த சுதந்திர வானில் நாம்
புறாக்களாக பறக்காமல்
நான்கு நூறுகளை வாங்கிக் கொண்டு
புறநானூறு புதிதாக ரசிக்கிறோமே!
இது சுதந்திரமா?

ஊரார் வீட்டு நெய் ஆனது
நம் நெல் வயல் அனைத்தும்
நெய்யை உருக்கி நிலக்கரி எடுத்து,
நெல்லை அழித்துக் கொள்ளை அடிக்க
காத்திருக்கும் கூட்டத்தின் காலடியில்
குமுறுகிறோமே,
இது சுதந்திரமா?

நாம் போட்ட ஓட்டு வெற்றியின்
மந்திரமா
இல்லை எந்திரத்தின் தந்திரமா
எனும் விவரம் தெரியாத
மூடர்களாய் நாம் இங்கே,
இது சுதந்திரமா?

ஐடி- இல் வேலை என்றாலும்,
ஆங்கிலேயனுக்கும் அமெரிக்கனுக்கும்
நாம் அடிமைகள் தான்!
ஆங்கிலம் தெரிந்தால்தான் அரை
வயிறு சோற்றுக்கான ஆபீசர் வேலை..
இந்தி தெரிந்தால்தான் நீ இந்தியன்!
இது சுதந்திரமா?

அவசர சட்டங்களுக்கு அடிமைகள்
நாம்,
அரசாங்க திட்டங்களுக்கு
தலையாட்டும் பொம்மைகள் நாம்,
நாம் பொம்மைகளாக இருக்கும் வரை
உண்மைகள் ஜெயிக்காது!
எப்பொழுது நாம் விழிக்கிறோமோ
அப்பொழுது தான்
நமக்கு சுதந்திர விடியல்!

- பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.

# நீரியல் பிழையாண்மை


இராசசேகரன் மன்னை

நாம் நீரியல் மேலாண்மையை அறிந்திருக்கிறோம். ஆனால் இது என்ன நீரியல் பிழையாண்மை என்ற கேள்வி உங்களுக்கு எழுகிறதா அப்படி கேள்வி எழுந்தாலம் நீங்களும் நமது நீரியல் சிக்கல் குறித்த தீர்வுகளை தேடலாம் அதற்காக சிந்திக்கலாம்.

பலக்கட்ட ஆய்வுகளுக்கு பிறகு இன்றைய அறிவியல் நீரை செயற்கையாக தயாரிக்க முடியாது என்றும், நீர் இல்லை என்றால் உயிரினங்கள் அழிந்துவிடும் என்றும், உயிரினங்கள் அழிந்து போனால் மனித இனமே அழிந்துவிடும் என்று அனைத்திற்கும் ஆதாரம் நீர் உலக இயங்குதலின் அடித்தளம் நீர் என்று கூறுகிறது.

இதையே வள்ளுவர் அறிவியல் அல்லாத காலத்திலேயே நீரின்றி அமையாது உலகு என்று ஒரு வரியில் கூறிவிட்டார். அப்படியானால் நமது முன்னோர்கள் இந்த உலக இயங்குதலை எப்படி கணித்திருப்பார்கள், எதையும் எவ்வளவு அறிவுபூர்வமாக சிந்தித்திருப்பார்கள் என்பதையும் உணர முடிகிறது.

வள்ளுவர் என்றில்லை, சங்ககால பாடல்கள் தொடங்கி இலக்கியம், கல்வெட்டுகள் என்று பலவற்றில் நீரியல் மேலாண்மை, நீர் பங்கீட்டு முறை, அதற்கான தொழில்நுட்ப அறிவு, மன்னர்கள் முதல் மக்கள் வரை இணைந்து நீர்நிலைகளை பராமரித்தல் என்று பல ஆவணங்கள் சிதறிக்கிடக்கின்றன. அவற்றை அப்படியே சிலேடையாக தொட்டுப்பார்த்தாலே இன்று நாம் நம்மை எந்த அளவிற்கு இழந்துள்ளோம் என்பது புரியும்.

நீரை சேமிப்பது குறித்தும் நமது முன்னோர்களின் அரசாட்சி குறித்தும் இளங்கோவடிகள் ''இடியுடைப் பெருமழை எய்தா ஏகப் பிழையாவிளையுள் பெருவளம் சுரப்ப மழைபிணித்து ஆண்ட மன்னவன்''

அதாவது மழைபிணித்து ஆண்ட மன்னவன் என்பது மழைப்பொழிவை முறையாக பயன்படுத்தி ஏரி, குளம், குட்டைகள் போன்ற நீர்நிலைகளில் சேமித்து தமது நிலத்தையும், மண்ணையும், நாட்டையும் வளம்பெறச் செய்யும் மன்னவன் என்ற பொருளில் இப்பாடல் பாடப்படுகிறது. இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது அக்காலத்திலேயே தமிழர்களும் நமது மன்னவர்களும் நீரை சேமிப்பதையும் அதுதான் தமது நாட்டை வளமாக வைக்கும் என்பதையும் ஆளமாக நம்பினர் என்பதும் அதனையே செயல்படுத்தினர் என்பதும் மக்களையும் இவ்வழியே வழிநடத்தினர் என்பதும் புரிகிறது.

‘‘நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத் தட்டோரம்ம இவன் தட்டோரே தள்ளாதோர் இவண் தள்ளாதோரே‘‘ என்கிற புறநானூறு பாடலில் பள்ளமான நிலம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் நீர்நிலைகளை அமைத்த மன்னவர்களே இவ்வுலகில் நீங்க புகழ் பெற்றவர்களாக விளங்குவர் என்கிறது.

அதே
புறநானூற்றின் இன்னொரு இடத்தில்
‘‘அறையும் பொறையும் மணந்த தலைய
எண்நாள் திங்கள் அணைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ‘‘ என்று குறிப்பிடுவதன் மூலம் ஏரியின் அமைப்பானது எட்டாம் நாள் தோன்றும் பிறையின் வடிவில் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. எட்டாம் நாள் பிறை வடிவில் ஏரி அமைப்பதன் மூலம் ஏரியின் நீளம் குறைவாகவும் அதே நேரத்தில் அதிக கொள்ளளவை கொள்ளும் விதத்திலும் ஏரி அமைக்க வேண்டும் என்று வழிக்காட்டுகிறது.

பதினெண் கீழ்கணக்கு பாடல்களுள் ஒன்றான திரிகடுகத்தில் நீர் வரும் வாய்க்கால் முறையாக இல்லதா குளம் பயனற்று போகும் என்பதை
‘‘வாய்நன் கமையாக் குளனும் வாயிறாரத் தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மார்பில்
கல்வி மாண்பில்லாத மாந்தரும் இம்மூவர் நலகுரவு சேரப்பட்டார்‘‘ என்று தாய்ப்பால் அருந்தாத குழந்தையும், கல்வி கற்காதவர்களும் எப்படி வாழ்வில் சிறக்க முடியாதோ அதுபோல வாய் நன்கு அமையாத குளங்கள் பயனற்றுப்போகும் என்கிறது.

நான்மணிக்கடிகையில் ஓரிடத்தில் ‘‘ யாறுள் அடங்குங் குளமுள வீறுசால்‘‘ என்று குறிப்பிடுவதன் மூலம் பெருமழை காலங்களில் அதிகமாக வரும் தண்ணீரை தமக்குள் அடக்கி வைக்கும் ஏரிகள் இருப்பது நாட்டிற்கு சிறப்பாக அமையும் என்று கூறுகிறது.

அகநானூறு
பாடொலன்று குளங்களையும், கண்மாய்களையும் எப்படி பராமரித்து பாதுகாத்து நின்றார்கள் என்பதை
‘‘பெருங்குளக் காவலன் போல அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே‘‘ அதாவது அன்னை தான் பெற்றெடுத்த பிள்ளைகளை காப்பதற்காக எப்படி ஊண், உயிர், உணவு, உறக்கம் அனைத்தையும் மறந்து கவனமாக இருப்பாளோ அதுபோல பனியிலும், மழையிலும் அடர்ந்த இருள் சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரியைக் காக்கும் காவலனை தாய்மையோடு ஒப்பிட்டு பாடுகிறது.

பழந்தமிழ் நூல்களில் நீர்நிலைகளில் இருந்து அதிகப்படியான நீரை வெளியேற்ற ‘‘கலிங்கு‘‘ என்ற பொறி பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இதிலிருந்து

அக்காலத்திலேயே தமிழினத்திடம் அதற்கான தொழில்நுட்ப அறிவும் செயல்திறனும் இருந்ததை உணர முடிகிறது. அதுபோல பழங்காலத்திலேயே தமிழரித்தடத்தில் நீரை வெளியேற்றும் மதகு, சுருங்கை போன்ற அமைப்புகள் இருந்துள்ளன. இந்த மதகுகளே குமுழித்தூம்பு என்கிற மிகமுக்கியமான தொழில்நுட்பமாக புழக்கத்தில் இருந்துள்ளது.

மணிமேகலையில்
''பெருங்குள மருங்கில் சருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம் உளமலி உவகையோடு உயிர்கொளப்புகும்''
அதாவது சுருங்கை என்பது பூடிக்கடியில் செல்லும் சிறுக்குழாய் என்று அறியப்படுகிறது இந்த சுருங்கை ஒருபுறம் தேங்கி இருக்கும் குளமாகிய நீரை மறுபுறம் கடத்தி மக்களுக்கு பெருவாழ்வு தருகிறது அதுபோல நமது காதுகளின் சிறுதுளை வழியாக நாம் கேட்கும் அறநெறி கருத்துக்கள் உள்ளத்தை சென்றடைந்து சிந்தனையை நெறிப்படுத்தி நல்வாழ்வு தரும் என்று அறநெறி வாழ்விற்கு நீரியல் மேலாண்மை மேற்கோளாக குறிக்கும் அளவிற்கு தமிழரிடத்தில் நீக்கமற நிறைந்து காணப்பட்டுள்ளது.

வேகமாக பெருகிவரும் நீரை தடுத்து நிறுத்தும் தடுப்பணைகளை ''கற்சிறை'' என்று குறிப்பிடுகின்றனர் இந்த கற்சிறையை குறிக்கும் விதமாக தொல்காப்பியர் ''பெருகிவரும் படையை ஒரு வீரன் தடுத்து நிறுத்தி போராடுவதுபோல் ஆற்று வெள்ளத்தை கற்சிறை தடுத்து நிறுத்துகிறது'' என்று கூறுகிறார்.

இப்படி சங்க இலக்கியம் கல்வெட்டு சான்றுகள் வரலாற்று குறிப்புகள் என்று எங்கு தேடினாலும் தமிழர்களின் நீரியல் மேலாண்மை குறித்த பல சொற்கள் கிடைக்கின்றன. அகழி, அருவி, ஆழிக்கிணறு, ஆறு, இலஞ்சி, உறை கிணறு, ஊருணி, ஊற்று, ஏரி, ஓடை, கட்டுங்கிணக் கிணறு, கடல்,கண்மாய், கலிங்கு, கால், கால்வாய், குட்டம், குட்டை, குண்டம், குண்டு, குமிழி, குமிழி ஊற்று, குளம், கூவம், கூவல்,வாளி, கேணி, சிறை அல்லது நீர்த்தேக்கம், சுனை, சேங்கை, தடம்,தளிக்குளம், தாங்கல், திருக்குளம், தெப்பக்குளம், தொடு கிணறு, நடை கேணி, நீராவி,பிள்ளைக்கிணறு, பொங்கு கிணறு, பொய்கை, மடு, மடை, மதகு, மறு கால், வலயம், வாய்க்கால், முள்ளம் இவற்றைத் தவிர இன்னும் தமிழ் இலக்கியங்களில், கல்வெட்டுகளில் பலவகையான நீர் நிலைகள் , நீரை சேமிக்கும் நுட்பங்கள் குறித்து பல செய்திகள் பேசப்படுகின்றன.

எப்படி சிந்தித்து பார்த்தாலும் நீரியல் மேலாண்மை தமிழரின் உயிரோடு, உணர்வோடு, உளவியலோடு, வாழ்வியலோடு கலந்திருப்பதாகவே தெரிகிறது. அந்த அளவிற்கு ஆளமான அறிவு இருந்ததால் தான் கரிகால சோழனால் கல்லணை கட்டமுடிந்துள்ளது என்பதையும் உணர முடிகிறது. இந்த இடத்தில் அறிவியல் இல்லாத தொழில்நுட்பம் இல்லாத காலத்தில் அணை கட்டப்பட்டுள்ளது என்று கூறுவார்கள். அனைத்தும்

இருந்தது ஆவணமாக இருந்ததோ இல்லையோ தமிழர் உளவியலில் இருந்தது, சிந்தனையில் இருந்தது, செயல்வடிவத்தில் இருந்தது. அதனால் அன்றே அணையை நிர்மானிக்க முடிந்தது. இதன் தொடர்ச்சி இறுதியாக சோழ பேரரசை உலகெங்கும் நிறுவிய இராசராச சோழன் அவர் மகன் இராசேந்திர சோழன் காலம் வரை நீடித்துள்ளது. இச்சோழப்பேரரசின் காலத்தில் தான் பல ஆறுகள் நிர்மானிக்கப்பட்டுள்ளன. பல வாய்க்கால், வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல்லாயிரம் ஏரி, குளங்கள் வெட்டப்பட்டுள்ளன. இதெல்லாம் அறிவில்லாமலோ, அறிவியல் இல்லாமலோ சாத்தியமில்லை. ஆனால் இன்றைய அறிவுசார் உலகம் தமிழினத்தின் மேலாண்மைக்கு அரிதாரம் பூசி ஆங்கில வழியில் ஆவணமாக்கி அதற்கு அறிவியல் என்று பெயர் வைத்து அது தமிழருக்கு தெரியாது என்ற கதையும் எழுதுகிறது. ஆனால் அனைத்திற்குமான விதை தமிழினத்திடம் இருந்து மட்டுமே எடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புவரை நீரியல் மேலாண்மையில் சிறந்து விளங்கிய இனம் இன்று பெரும் பிழையில் அனைத்தையும் இழக்கும் நிலையில் உள்ளது. அன்று இருந்த மன்னர்கள் அப்படி இருந்தார்கள் மண்ணை நேசித்தார்கள், மக்களை நேசித்தார்கள் இன்று ஆட்சியாளர்கள் அப்படி இல்லையே என்று கூறலாம். உண்மை தான் சோழர் காலத்திற்கு பிறகு பல்லவர், களப்பிரர் நாயக்கர், மராட்டியர், வெள்ளையர், இந்தியர், திராவிடர் என்று ஆயிரம் அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த மாற்றங்களோடு நமது உளவியலும் மாற்றப்பட்டுள்ளது. மண் மீதான பற்றும், மக்கள் மீதான பந்தமும், நீரியல் மேலாண்மையில் இருந்த ஆளுமையும் அழிந்துவிட்டது.

அன்று மன்னராட்சி நடந்தது. அன்றைய நிலையில் மன்னர்கள் வைப்பது தான் சட்டம். அவர்கள் மக்களை பற்றியோ, மண்ணை பற்றியோ சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. அந்த அளவிற்கு சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர் அன்றே இவ்வளவு சிறந்து விளங்கி இருக்கிறோம் என்றால் மக்களாட்சியில் எவ்வளவு செழிப்பாக இருக்க வேண்டும் என்பதை ஒருமுறை மனக்கண்ணில் ஓட்டிப்பாருங்கள். இந்த நிலம் பசுமை போர்த்திய சோலையாக இருக்கும். மக்கள் பொருளாதரத்தில் மேம்பட்டு இருப்பார்கள். இல்லை என்று கேட்க ஆளிருக்காது அப்படியே கேட்டாலும் மறுக்க மனமிருக்காது. அப்படியே கண்விழித்து ஆறு, குளங்களையும், வாய்க்கால், வரப்புகளையும், ஏரி, ஓடைகளையும், குட்டை, கிணறுகளையும் பாருங்கள் ஆடை அவிழ்த்து அம்மனமாய் திரிவது சிந்தனையை உறுத்தும்.

அனைத்து ஏரிகளிலும் கட்டிடங்கள் ஆக்கிரமித்துள்ளன. தனியார் என்றால் கூட வழக்காடி மீட்கலாம் ஆனால் பல வழக்காடு மன்றங்களே ஏரியில் தான் கட்டப்பட்டுள்ளது. நீரின்றி அமையாது உலகு என்று கூறி உலகின் பொதுமறை வகுத்த வள்ளுவருக்கு கோட்டம் எழுப்பப்பட்டுள்ளது, பார்ப்பதற்கு அப்படி ஒரு அழகு, ஆனால் அதுவும் ஏரியில் தான் எழுப்பப்பட்டுள்ளது என்பதை அறிந்து விலகு. ஏரியின் நிலைகள் இப்படி இருக்க ஆறுகளை கண்டால் அந்தோ பரிதாபம் ஒன்றிய இந்தியாவில் இணைந்து இருக்கிறோம். மற்ற மாநிலங்களை காட்டிலும் வரிகளை

அள்ளிக்கொடுக்கிறோம். முதலில் இந்தியன் பிறகு தான் தமிழன் என்று நெஞ்சை நிமிர்த்துகிறோம். ஆனால் மொழிவாரி மாநிலம் பிரிக்கும் போதே நமக்கு வரவேண்டிய அனைத்து நீர்பிடிப்பு பகுதிகளையும் ஆறுகள் உற்பத்தி ஆகும் நிலங்களையும் அண்டை மாநிலங்களுக்கு தாரைவார்த்துவிட்டோம். எதன் அடிப்படையில் அலட்சியமாக இருந்தோம் நானும் இந்தியன், நீயும் இந்தியன் மேடென்ன பள்ளமென்ன எல்லாம் இந்தியாவில் தானே உள்ளது என்று கொடுத்தோம். ஆனால் காவிரி உரிமை மறுக்கப்படுகிறது. பாலாறு உரிமை மறுக்கப்படுகிறது. முல்லைப்பெரியாறு உரிமையும் மறுக்கப்படுகிறது. இந்தியமும் வாங்கிக்கொடுக்க மறுக்கிறது. இதன் விளைவாக நீரோட வேண்டிய ஆறுகளை மணல் சரக்கு உந்து ஓடுகிறது. தமிழகம் என்றில்லை யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று எங்கெல்லாம் வாகனம் போகமுடியுமோ அங்கெல்லாம் மணல் போகிறது. நாளை செவ்வாய் கிரகத்திற்கு மண் வேண்டும் என்ற சூழல் வந்தாலும் தயங்காமல் அனுப்புவார்கள் அதையும் வளர்ச்சி என்று பெருமிதம் கொள்வார்கள். இப்படியே மணலை எடுத்து எடுத்து ஆறுகள் அதளப்பாதாளத்திற்கு போனது.

பாதளாத்தில் நீரோடினால் எங்கிருந்து வாய்க்காலுக்கு தண்ணீர் செல்லும். அப்படியே வாய்க்காலுக்கு தண்ணீர் செல்ல வாய்க்கால் எவ்வளவு கீழே இருக்க வேண்டும். வாய்க்காலில் இருந்து வயல், குளம், குட்டை, ஏரிகள் எவ்வளவு பாதாளத்தில் இருக்க வேண்டும் என்பதை கொஞ்சம் சீர்த்தூக்கி பாருங்கள்.

சென்ற வருடம் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க தமிழகத்தில் போராட்டங்கள் வலுத்த போது கர்நாடகத்தில் எவ்வளவு வெறியாட்டம் நிகழ்த்தப்பட்டது. முதுமையை தொட்ட ஓட்டுனரை சாலையில் வைத்து அடித்தார்கள். தமிழகத்திற்கு தண்ணீர் தரவேண்டும் என்று சமூக வலைதளத்தில் பதிவு செய்த இளைஞனை அடித்து காவிரி கன்னடருக்கே என்று சொல்ல வைத்தார்கள். தமிழில் இருந்த பதாகைகளை கிழித்தெரிந்தனர். தமிழ் திரைப்படங்களை திரையிடவிடாமல் தடுத்தனர் அனைத்திற்கும் மேலாக நூற்றுக்கணக்கான தனியார் போருந்துகளை தீயிட்டு எரித்தார்கள். தண்ணீர் அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது அதை திறப்பதற்கான சாவியும் அவர்களிடத்தில் உள்ளது அனைத்து அரசியல் தலைமைகளும் தண்ணீர் கொடுக்க வேண்டும் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்க வேண்டும் என்ற கருத்தியலை ஏற்கவில்லை இருந்தாலும் அங்கே அவ்வளவு வெறியாட்டம் நிகழ்ந்தது. தடுப்பவர்களே இவ்வளவு முயற்சி எடுக்கிறார்கள் என்றால் உரிமையை பெறுவதற்கு நாம் எவ்வளவு முயற்சி எடுக்க வேண்டும். அப்படி முயற்சி எடுத்து தண்ணீர் வந்தால் கூட நீர்நிலைகளில் தண்ணீரை சேமிக்கும் அளவிற்கு வழிகள் இருக்கிறதா என்றால் இல்லை. இதையே காரணமாக கூறி பலர் காவிரி உரிமையை தடுக்கும் ஆயுதமாக பயன்படுத்துகின்றனர். இதே நிலை தான் முல்லை பெரியாறு மற்றும் பாலாறு சிக்கல்களிலும் பேசுப்பொருளாக உள்ளது. இதனை சரிசெய்வது இன்று தலையாய கடமையாக நமக்கு உள்ளது.

இன்று தமிழர் நிலத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளும், நீர் வழித்தடங்களும்

சிதைந்த நிலையிலே உள்ளன. ஆறுகளின் கரைகள் பலமிழந்து உள்ளன. வாய்க்கால்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. குளம், குட்டை, ஏரிகள் தூர்ந்து உள்ளன. இவற்றை ஒழுங்குப்படுத்த வேண்டிய அரசாங்கம் நீர் சிக்கல் குறித்த எதிர்கால சிந்தனையற்று நீரை விற்பனை பொருளாக மாற்றும் முயற்சியில் மும்மரமாக உள்ளன. அரசாங்கம் தவறிழைக்கும் நிலையில் அதனை நெறிப்படுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் மக்களாட்சியின் ஆணிவேரான மக்களுக்கே உள்ளது. நமக்காக தான் அரசாங்கமே ஒழிய அரசாங்கத்திற்காக மக்கள் இல்லை. இந்த வலிமையை மக்கள் இதுவரை உணரவில்லை. அதுவே நாம் செய்துள்ள மிகப்பெரிய பிழை.

பிழை என்று எளிமையாக கூறி இதனை கடந்துவிட முடியாது. எதிர்கால தலைமுறைக்கு நாம் செய்கின்ற துரோகம். சங்க காலம் தொட்டு பாதுகாத்து வைத்திருந்த நீரியல் சார்ந்த அறிவை இழந்து நமது முன்னோர்கள் நமக்கு பாதுகாத்து கொடுத்த நீர்வளத்தையும் அழித்து வாழத்தகுதியற்ற நிலத்தில் நமது சந்ததிகளை விட்டுச்செல்லப்போகிறோம். இது எவ்வளவு பெரிய நம்பிக்கை துரோகம். அனைத்து பிள்ளைகளும் கடவுளை அறிந்து கொள்வதற்கு முன்பு தனது தாய் தந்தையை தான் தன்னை காக்கும் கடவுளாக பார்க்கின்றனர். நாமும் அவர்களின் எதிர்காலத்தை மனதில் வைத்து தான் நம்முடைய பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தையும் திட்டமிடுகிறோம். அவர்கள் விரும்பும் அனைத்தையும் வாங்கி கொடுக்க வேண்டும் நினைக்கும் நாம் வாழ்வாதாரத்தின் அடிப்படையான நீரை சுத்தமானதாக பாதுகாப்பானதாக அவர்களுக்கு கொடுக்க வேண்டாமா.

நாம் ஓரிடத்தில் உளவியலாக சிதைக்கப்பட்டுள்ளோம். பணம் இருந்தால் எதையும் வாங்க முடியும் என்ற நஞ்சை மனதில் விதைக்க அனுமதித்துள்ளோம். அதனால் தான் இயற்கை சூழலியல் சார்ந்த எந்த சிந்தனையுமின்றி சிதைத்து வருகிறோம். ஒருகணம் சிந்தித்தால் அனைத்தையும் நெறிப்படுத்துவோம் அதற்கான அறிவும் வலிமையும் நம்மிடம் உள்ளது. நமது உடல் வருமானத்தை ஈட்டும் கருவி அல்ல அது வாழ்வதற்கானது அந்த வாழ்க்கையில் வருமானமும் ஒரு அங்கம். அதுபோல கல்வி என்பது பணம் ஈட்டும் கருவியல்ல அது அறிவை வளர்க்கும் ஆயுதம். நாம் ஆயுதமாக பார்க்காமல் கருவியாக பார்த்ததன் விளைவு இன்று பணம் ஈட்டமட்டுமே கற்கிறோம் அதோடு நிற்கிறோம் அதை கடந்து எதையும் சிந்திப்பதில்லை. சிந்தனை இல்லாததால் அச்சம் மேலோங்குகிறது, அச்சம் மேலோங்குவதால் நாம் உண்டு நான்கு சுவர் உண்டு, சுவருக்குள் குடும்பம் என்ற ஜடமுண்டு என்ற வாழ பழகிவிட்டோம். இந்த வாழ்க்கை நம்மை மக்களாட்சியில் இருந்து தூக்கி வெளியே எறிந்துவிட்டது. இன்று மக்களும் ஆட்சியும் இணைந்து இருக்க வேண்டிய அமைப்பு மக்கள் தனியாகவும் ஆட்சி தனியாகவும் இருந்து எதிரெதிர் திசையில் பயணிக்கிறது எல்லாம் சீர்கெட்டு இருக்கிறது.

இந்த சீர்க்கேட்டில் இருந்து மீளவேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்த தலைமுறை மீண்டெழுந்தால் தான் எதிர்கால தலைமுறை இந்த மண்ணில் நிலைத்து வாழ வழியும் வாழ்வாதாரமும் கிடைக்கும். தேவைக்காக தான் வாழ்கிறோம், அதற்கு பணம்

இன்றியமையாதது, மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அதுமட்டுமே வாழ்க்கை அல்ல என்பதை மட்டும் ஏற்கவேண்டும். அடிப்படை தேவைகள் என்று சில உள்ளது அதை நாம் உருவாக்க முடியாது அது இயற்கை நமக்கு கொடுத்த கொடை. அந்த கொடையை நமது முன்னோர்கள் பாதுகாப்பாக நமக்கு கொடுத்து சென்றுள்ளனர் நாமும் நமது தலைமுறை அதனை செழுமைப்படுத்தி கொடுக்க வேண்டும் அவர்கள் தலைமுறைக்கு அவர்களும் கொடுக்க வேண்டும் என்ற படிப்பினையையும் ஊட்ட வேண்டும்.

நாங்கள் அனைத்தையும் ஏற்கிறோம், ஆட்சியாளர்களை கேள்விக்கேட்கிறோம், நீர்நிலைகளை சரிசெய்கிறோம் காவிரியில் தண்ணீர் வருமா முல்லைப்பெரியாறு அணை திறக்குமா பாலாறு தமிழர் நிலத்தை நனைக்குமா என்று நீங்கள் கேட்கலாம். கண்டிப்பாக காவிரி, முல்லைப்பெரியாறு, பாலாறு அனைத்தும் தமிழர் நிலத்திற்கு வரும் இயற்கை அதன் பாதையை அமைத்து கொள்ளும். நாம் ஒன்றை உணர வேண்டும் இந்த நீர்நிலைகளின் வடிகால் தமிழர் நிலம் தான் இந்த ஆறுகள் தமிழர் நிலம் வந்து எமது மண்ணை வளமாக்கி கடலில் கலக்க வேண்டும் இதுவே இயற்கை வகுத்துள்ள அமைப்பு இதனை எவராலும் மாற்ற முடியாது. தற்காலிகமாக தடுத்து வைக்கலாம் ஆனால் இயற்கை தமது வழித்தடத்தில் இருந்து என்றும் மாறாது.

உதாரணத்திற்கு சென்ற வருடமும் கர்நாடகத்தில் கடுமையான மழை வெள்ள பாதிப்பு பெரும்சேதம் இலட்ச கணக்கில் தண்ணீர் தமிழர் நிலம் வந்தது. நமது நீர்நிலைகள் பராமரிப்பு இல்லாததால் மண்ணை வளமாக்கி கடலில் கலக்க வேண்டிய நீர் நேரடியாக கடலில் கலந்தது. இம்முறையும் அதே மழை அதே வெள்ளம் அதே அளவு தண்ணீர் தமிழர் நிலத்திற்கு வருகிறது இம்முறை நீர்நிலைகளில் சேமிக்க வேண்டிய வேலையை நாம் செய்ய வேண்டும்.

இந்த நேரத்தில் ஏன் இவ்வளவு வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். தண்ணீரை பொறுத்தவரை ஓரிடத்தில் தோன்றி வேறொரு இடத்தில் கலக்க வேண்டும் ஆனால் கர்நாடகம் என்ன செய்கிறது இயற்கையின் கொடையாக மழை பொழிகிறது, மழைநீர் அருவியாகிறது, அருவி காவிரி ஆறாக பரிணாமிக்கிறது. இந்த காவிரி ஆறு கர்நாடகம் கேரளம் பாண்டிச்சேரி தமிழ்நாடு என்று பாய்ந்து கடலில் கலக்க வேண்டும் இதுவே இயற்கை ஆனால் கர்நாடகம் இதற்கு அனுமதிப்பதில்லை.

காவிரியின் அனைத்து நீரையும் அணைக்கே வரவிடாமல் முறைக்கேடாக பல செயற்கை நீர்நிலைகளையும், விசை இயந்திரங்களை கொண்டு மேட்டு பகுதிகளுக்கு கடத்தியும் சேமிக்கிறது. எஞ்சிய நீரே அணைக்கு வருகிறது. இதனால் பருவ மழை காலங்களில் எந்நேரமும் நீர்நிலைகளில் தண்ணீர் இருப்பதால் அபரிமிதமான தண்ணீர் ஒரேநேரத்தில் வெளியேற்றும் நிலை ஏற்படுகிறது. அதற்குள் வெள்ள சேதத்தையும் ஏற்படுத்தி விடுகிறது, இதே நிலை தான் கேரளாவிலும். ஆனால் இந்த வெள்ள சேதம் அடிக்கடி ஏற்பட்டால் முறைக்கேடான நீர்நிலைகள் பலவீனமாகி உடைப்பு ஏற்பட்டு

மிகப்பெரிய சேதத்தை உருவாக்கும் என்பதை ஏற்க அவர்களுக்கு மனமில்லை. ஆனால் இயற்கைக்கு அதெல்லாம் தெரியாதே, அது தனக்கான பாதையை தானே உருவாக்கும் அதற்கு இடையூறாக இருக்கும் அனைத்தையும் அழிக்கும் கண்டிப்பாக கர்நாடகா, கேரளாவில் இருந்து தமிழர் நிலத்திற்கு தண்ணீர் வரும்.

இந்த நேரத்தில் நாம் செய்ய வேண்டியது ஒன்று தான் பழந்தமிழர் வழியில் நம்முடைய நீரியல் மேலாண்மையை மீட்டெடுக்க வேண்டும். இதை அவர்கள் செய்வார்கள் இவர்கள் செய்வார்கள் என்றில்லாமல் நாமே நேரடியாக களத்தில் இறங்க வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் மக்கள் அணி அணியாக இணைந்து போர்கால அடிப்படையில் நீர்நிலைகளையும் வழித்தடங்களையும் மீட்க வேண்டும். இந்த வருடம் என்றில்லை இனி ஆண்டாண்டு காலம் இதனை தொடர்ச்சியாக செய்தால் மட்டுமே இங்கே நீரோடு வாழ முடியும். ஒரு சொட்டு நீரை கூட வீணாக்காமல் நீர்நிலைகளில் சேமித்து வடிகாலாக கடலுக்கும் தண்ணீர் செல்லும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

இதெல்லாம் பேசலாம் செய்ய முடியுமா என்று சிந்திப்பது தெளிவாக தெரிகிறது. ஆனால் இந்த சிந்தனை இயலாமையால் ஏற்படுகிறது கண்டிப்பாக இணைந்து செயலாற்றினால் செய்யலாம். அவரவர் பகுதியில் உள்ள நீர்நிலைகளை அவரவரே இணைந்து சரிசெய்தால் அனைத்தும் சாத்தியமே. நாம் செய்ய தொடங்கினால் போதும் ஆட்சியாளர்கள் தானாக செய்வார்கள். அவர்கள் நம்மை தனித்து இயங்க அனுமதிக்கமாட்டார்கள் அப்படி அனுமதித்தால் நமக்கு தேவையானதை நாமே செய்து கொள்கிறோம் பிறகு நமக்கு எதற்கு தலைமை ஏன் அரசு என்ற சிந்தனை வரும் அந்த சிந்தனை அவர்களை அதிகாரத்தில் இருந்து அப்புறப்படுத்தும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே நம்மை விட வேகமாக செயல்படுவதாக காட்டிக்கொள்வார்கள் அதையும் கண்காணித்து நாம் உண்மையாக செய்ய வைத்தோம் எனில் அனைத்து சிக்கல்களுக்கும் தீர்வு கிடைக்கும். ஊருக்கு பொதுவாக வசூலித்து திருவிழா நடத்துகிறோம் பல நிகழ்ச்சிகள் நடத்துகிறோம் அதைபோல நீர்நிலைகளையும் மீட்போம். அன்று பழந்தமிழர் செய்தார்கள் என்றால் மன்னர்கள் மட்டுமே செய்யவில்லை மக்களின் பங்களிப்போடு தான் செய்திருப்பார்கள் அதுபோல மக்கள் செய்வோம் அரசு பங்களிப்பு செலுத்த வேண்டிய கட்டாயத்தை உருவாக்குவோம்.

செய்யலாம் ஆனால் அதையும் கலைத்து விட தான் கூட்டம் இருக்குமே என்ன செய்ய என்று கேட்க நினைப்பது புரிகிறது. மனிதன் என்று வந்தாலே நல்லது, கெட்டது, சூது வன்மம் இப்படி பல குணாதிசயங்கள் கலந்த கலவைதான் அனைவரும் நல்லவர்களாக வேண்டும் மண்ணை காக்க வேண்டும் என்று நினைப்பது தவறு நூற்றில் பத்து பேர் அப்படி தான் இருப்பார்கள் ஏனைய தொன்னூறு பேர் தான் அந்த பத்துப்பேரை ஊர் நன்மைக்காக அடக்க வேண்டும் புரியவில்லையா.

நீங்கள் உங்கள் ஊர் மக்களை அழைத்து கொண்டு சத்தமில்லாத ஊர் கோவிலில் கூட்டம் போடுவதாக நினைத்து கொள்ளுங்கள். அங்கே நீர்நிலைகளை மீட்பது குறித்து பேசுவதாக எண்ணிக்கொள்ளுங்கள். வேறு எந்த சத்தமும் இல்லாத இடத்தில் நீங்கள்

கோரிக்கை முன்வைத்து பேச தொடங்கிய உடனே ஒரு சலசலப்பு ஏற்படும். சற்று கண்ணை மூடி கவனியுங்கள். ஒரு பத்து சதவீதம் பேர் தான் இதெல்லாம் நடக்காது வெட்டிவேலை என்று அவர்கள் மனதிற்கு தோன்றியதை பேசுவார்கள். அந்த இடத்தில் இச்செய்கையின் நியாயத்தை உணர்ந்த ஏனைய தொன்னூறு சதவீத பேரும் பேசத்தொடங்கினால் இந்த பத்து சதவீதம் பேரும் இருக்கும் இடம் தெரியாமல் ஒடுங்குவார்கள். எப்படி மழையாகி அருவியாகி ஆறாகி தடைகளை தகர்த்து நீர் கடலில் கலக்கிறதோ அதுபோல நாமும் நீர்நிலைகளை மீட்பதே இலக்காவும் அதற்கான தடைகளை உடைப்பதே களமாகவும் கொண்டு செயலாற்றினால் கண்டிப்பாக பழந்தமிழர் மரபணுவை மீட்டு நீர்யல் மேலாண்மையில் உலகை ஆளலாம்.

✸பிழை ஆமையை விரட்டி நீரியல் ஆளுமையை வளர்ப்போம்✸

- இராசசேகரன் மன்னை

---

# துணிவோடு போராடு

உன் பிறப்பில் இருந்து துவங்கியதே
போராட்டம் அது உன் ஆசையால்
ஆன இலக்கை அடைவதற்காக!

நீ எவ்விலக்கை அடைய
நினைத்தாயோ அவ்விலக்கை நோக்கி
பயணிக்கிறாய் துணிவோடு
போராடுவதற்காக!

உன் இதயத்தில் துணிவு இருப்பதால்
அந்த இமயத்தின் உச்சியையும்
அடைவாய் நீ வாழ்வில்
புகழ்பெறுவதற்காக!

நீ கடல் அலையாக காலத்தை அறிந்து
செயல்பட்டால் உன் வெற்றி
போராட்டத்தை எவரும் நெருங்க
முடியாமல் இருப்பதற்காக!

உன் வாழ்வில் இலட்சிய பாதையை
நோக்கி போராடு, அது உன்
வெற்றியாக அமைவதற்காக!

நீ கதிரவன் உதிக்கும் முன்
அதிகாலையில் எழுந்து மைதானத்தில்
ஓடுகிறாய். தன்னம்பிக்கையுடன்
போராடுகிறாயே அது உன் உடல்
ஆரோக்கியம் பெறுவதற்காக!

நீ நேர்மையுடன் துணிந்து செல்,
வாழ்வின் போராட்ட களத்தில்
வெற்றியை ஈட்டுவதற்காக!

உன் மனம் அஞ்சாதே,
நேர்மை தர்மம் இருக்கும் போது
அதர்மத்தை உடைத்தெறிவதற்காக!

‘‘நீ வாழ்வில் துணிவோடு போராடு
வெற்றியின் முடிவை அடையும்
வரை‘‘.

--

மன்னை பா. தமிழ்பிரியன்

# யார் இவர்கள்


கனிமொழி

‘‘ஸ்ரீ.. எல்லாத்தையும் எடுத்து வச்சுக்கிட்டியா?? இன்னும் நாலு மணி நேரத்துல நீ ஏர்ப்போர்ட்-ல இருக்கனும்.. நியாபகம் இருக்குல்ல‘‘, என்றவாறே உள்ளே நுழைந்தாள் வெண்பா..

‘‘ ஹ்ம்.. பேக் பண்ணிட்டேன் வெண்பா.. நீயும் என்கூடவே வாயேன்.. உன்ன இங்க விட்டுட்டு போறதுக்கு எனக்கு மனசு வரல‘‘, என தன் நீண்ட நாள் வாதத்தை மறுபடியும் அவள் முன் வைத்தாள் ஸ்ரீ..

‘‘அதுக்கென்ன வர்றேன்.. சீக்கிரம் நீ ஒரு கல்யாணம் பண்ணி கொழந்த, ஃபேமிலி-னு சந்தோஷமா வாழ்ந்துட்டிருக்க-னு கேள்விப்பட்ட அடுத்த நிமிஷம் அங்க இருப்பேன்..‘‘, என வெண்பாவும் தனது எதிர் வாதத்தை வைத்தாள்..

‘‘ ப்ச்..நா சொல்றது உனக்கு புரிஞ்சும் ஏன் இப்படி பேசுற??‘‘, தன் மனதை அப்பட்டமாக வெளியே காட்டினாள் ஸ்ரீ..

‘‘என்ன பயப்படுறியா?? பயப்படாத..எனக்கெதுவும் ஆகாது.. அப்படியே ஆனாலும் பரவாயில்ல.. ஐ ஹேவ் லிவ்ட் எ ஹேப்பி லைஃப் டில் டேட்..சோ நா எதையும் மிஸ் பண்ண போறதில்ல.. எக்சப்ட் யூ..‘‘, என அவள் தலைக் கோதி நெற்றியில் அழுத்தமாய் முத்தமிட்டாள்..

ஸ்ரீயும் அதை எதிர்ப்பார்த்தவளாய் வெண்பாவை இறுக்க அணைத்துக் கொண்டாள்..மௌனங்களை மொழியாக்கி இருவரும் ஒருவருக்கொருவர் அரவணைப்பில் இருந்தனர்..

‘‘ ஓ.கே.. நீ வர வேண்டாம்.. ஆனா.. என்னோட ரொம்ப நாள் கேள்விக்கு பதில மட்டும் சொல்லு.. நீ எப்படி இங்க வந்த?‘‘

‘‘நா எங்க இங்க வந்தேன்.. நீ தான் வந்த.. நா இதே ஏரியா தான்‘‘, என தன் பதிலைக் கூறினாள் வெண்பா..

‘‘ நா ஒன்னும் தெரிஞ்சே இங்க வரல..எல்லாம் என் விதி‘‘, என தனக்கு நேர்ந்ததை நினைத்து மனம் வெதும்பினாள் ஸ்ரீ..

ஸ்ரீயின் கதை தெரிந்தும் தான் இப்படி வார்த்தை விட்டதை நினைத்து தன்னை தானே கடிந்துக் கொண்டு அவளை ஆசுவாசப்படுத்தியவள்,‘‘சாரி டா ஸ்ரீ.. அது அப்படியே பேச்சு வாக்குல வந்துடுச்சு...மன்னிச்சுடு இந்த வெண்பாவ‘‘, என அவளது முகத்தை

ஏந்தி மன்னிப்புக்காய் காத்திருந்தாள் வெண்பா..ஸ்ரீயின் கண்ணீர் ஓயாமல் இருக்கவே அவளைத் தோளோடு சாய்த்து தட்டிக் கொடுத்து கொண்டிருந்தவள் அவள் வந்த நாளைப் பற்றி எண்ணினாள்..

கேரளாவின் பேருந்துகளும், ஆட்டோக்களும் ஊமையாகி கால் டாக்சிகளும், பெருமதிப்பிலான கார்களும் சிரித்துப் பேசும் நட்ட நடு இரவு அது.. அப்பெரிய விடுதியில் வெண்பாவின் அறை விளக்கு மட்டும் எரிந்துக் கொண்டிருக்கும். ஆண்களும் பெண்களும் அவளிடம் அனுமதி வாங்கித் தானே அன்றைய விளையாட்டைத் தொடங்க முடியும்.. பின்னே அவள் செக்ஸ் ஒர்க்கர்ஸன் நலனுக்காக இருக்கும் மருத்துவர்!! சைக்காலஜியில் முனைவர் பட்டம் பெற்றவள். செக்ஸ் ஒர்க்கர்ஸின் நலன் அவளது குறிக்கோளே அல்ல...அவர்களை எப்படியாவது இத்தொழிலிலிருந்து விடைப் பெறச் செய்வதே அது.. ஆனால் இவ்விஷயம் அவளது ஓனர்-க்கு தெரியாது.. அப்படி அனைவரும் போய்விட்டால் பிசினஸ் டல்லடித்து விடுமே!!
விருப்பப்பட்டு இத்தொழிலுக்கு வருவோர் இருப்பினும் விருப்பமின்றி சந்தர்ப்ப சூழ்நிலைக்காக இத்தொழிலுக்கு வருவோர் தான் அதிகம்.. அதிலும் அப்படி வந்தவர்கள் திருந்தி வாழ நினைப்பதில் சுனக்கம் காட்டுகின்றனர் என்பதே வெண்பாவின் வேதனையாக இருந்தது..

‘‘ஒரு நாளுக்கு 4 மணிநேரம் படுத்தோம்னா நல்ல வெயிட் பார்ட்டியா இருந்தா 1 வாரத்துக்கு கஷ்டமேயில்லாம இருக்கலாம்.. அதுலயும் கம்பெனிக்கு போக மீதி சேத்து வச்சுக்கலாம்.. வயசானதுக்கப்றம் உபயோகப்படும்ல...நீ சொல்ற மாதிரி நா இந்த பொழப்பு வுட்டுட்டு போனா எனக்கு யாரு மொதல்ல வேல தருவா?? இப்படி நான் இருந்தேன்னு தெரிஞ்சதுக்கப்றம் அவன் சும்மா விடுவானா?? ஏன் அவனே என்ன அப்பப்ப கூப்ட மாட்டான்? அப்படி இல்லன்னாலும் இங்க பாக்குற காச வேற எங்கயாவது பாக்க முடியுமா?? எனக்கு நீ சொல்றது புரியுதுமா.. தப்பு தப்பான வார்த்தைகள்ள எங்கள கூப்புடறவங்க மத்தியில வாய் நெறய அக்கானு நீ தான் உரிமையா கூப்புட்ற..இப்படி நல்ல வழி சொல்ற..இருந்தும் என்னம்மா பண்றது?? புருஷனே என்ன இங்க கொண்டு வந்து விட்டுட்டான்.. நாள் தவறாது காசு கொண்டு போலன்னா அவன் பேயாட்டம் ஆடிடுவான்.. விடுடா.. என் தலையெழுத்து இதான்..நீ ஊசிய போடு‘‘, என மல்லிகா அக்கா கூறியதைக் கவலையாய் கேட்டுக் கொண்டிருந்த அந்த நேரத்தில் தான் ஸ்ரீயைப் பார்த்தாள்..

அழுத கண்களும் வெளிறிய முகமுமாய் பயத்துடன் காணப்பட்ட அவளை முரட்டுத் தனமாக இருவர் இழுத்து இவளிருந்த அறைக்கு வந்தனர்..

‘‘ இந்த பொண்ணுக்கு டெஸ்ட் எல்லாம் எடுத்து வைங்க.. 3 நாள்-ல இவள இங்க யூஸ் பண்ணனும்‘‘, என தள்ளி விட்டு சென்றனர்..

வெண்பாவையே மிரள பார்த்தவள், மல்லிகா சென்றவுடன் அப்படியே ஒடுங்கி உட்கார்ந்தாள்..

''ப்ளீஸ்..என்ன விட்டுடுங்க..எப்படியாவது காப்பாத்துங்க'', என அவள் காலை பிடித்து கதறினாள்..

தன்னறையை சாத்தி தாழிட்டவள், அவளை ஆராய்ந்தாள்.. வயது இருபதே இருக்கும்.. கல்லூரி படிப்பை முடித்திருக்கக் கூடும் என கணக்கிட்டாள்.. அவளிடம் கேட்க நினைக்கும் முன்பாக அவளே பேசினாள்..'' என் பேரு ஸ்ரீ.. அப்பா அம்மா இல்ல.. சித்தப்பா தான் கார்டியனா இருந்து படிக்க வச்சாரு ...சென்னை தான் சொந்த ஊரு..அங்க தான் படிச்சேன்..'', என நிறுத்தியவளிடம், ''சரி.. இங்க எப்படி வந்த?? யார் கூட்டிட்டு வந்தா??'', என கேட்டாள் வெண்பா..
இவளிடம் சொல்லலாமா வேண்டாமா என்ற குழப்பதிலிருந்தவளிடம் '' தைரியமா சொல்லு.. இங்க இருந்து போகனும்னு நெனப்பு இருந்தா ஃபிராங்க்கா எல்லாத்தையும் சொல்லு..ஐ வில் டேக் கேர்'', என தலையை வருடினாள்..

''சித்தப்பா தான் இப்படி பண்ணிட்டாரு.'', என சொல்லி அழுதவளைத் தேற்றுவது தெரியாது அணைத்துக் கொண்டேன்..

'' அவரு என்கிட்ட மோசமா தான் நடந்துக்கிட்டாரு... 12 வயசு இருக்குறப்போ'', என அவள் சொல்ல தொடங்குகையில் அழுகை பீரிட்டதையும் பொருட்படுத்தாமல் மேலும் பேசினாள்..'' அப்போ அவரு எனக்கு ட்ரக்ஸ் கொடுத்து என்ன ரேப் பண்ண ட்ரை பண்ணியிருக்காரு.. இத எங்க சித்தி பாத்து பதறிப் போய் என்ன காப்பாத்தி, ஹாஸ்டல்ல சேத்து படிக்குற மாதிரி பண்ணாங்க

அன்னைக்கு சித்தி இல்லன்னா நான் எப்பவோ இப்படி ஆகி இருப்பேன்..அவருக்கு இன்னும் அந்த கோபம் போகல போல.. நான் தான் அவரோட தப்ப அவரு உணர்ந்துட்டாருன்னு நெனச்சு கேரளா-ல உனக்கு வேலைக்கு சொல்லிருக்கேன்.. கொச்சின் போனதும் உன்ன என் ஃபிரண்டு வந்து கூட்டிட்டு போவான்.. உன்னோட அக்கமடேஷன், ஃபுட் எல்லாம் பேசி ரெடி பண்ணியாச்சுன்னு அவர சொன்னத நம்பி இங்க வந்தேன்.

''இங்க வந்தா..ஒரு நாள் ஃபுல்லா என்ன அடச்சு வச்சு..இப்ப இங்க கூட்டிட்டு வந்து விட்டுட்டாங்க'', என கோவத்துடன் கூறியவளை என்ன செய்வதென்று தெரியாமல் எனக்கென ஒதுக்கியிருக்கும் வீட்டிற்கு கூட்டி சென்றேன்.

அவளுக்கு பீரியட்ஸ் என கூறி டெஸ்ட் எடுப்பதை தள்ளி வைத்திருந்த நேரத்தில் தான், அவள் ஆஸ்திரேலியா செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் எனது நட்பு வட்டாரத்தின் மூலம் செய்து முடித்திருந்தேன்..

‘‘ அப்பா வயசுல இருக்குற ஒரு மனுஷன் இப்படிலாமா பண்ணுவான்?? அது சரி இந்த பசிக்கு தான் வயசு வித்தியாசம், உறவுன்னு எதுவுமே தெரியாதே‘‘, என நினைக்கும் பொழுதே அவள் கிளம்ப வேண்டிய நேரம் உண்மை நிலையை விளக்கியது....

‘‘புதுசா வந்த பொண்ணுக்கு இன்ஃபெக்ஷன் ஆயிடுச்சு..அப்படியே அவ செக்ஸ் வச்சுக்கிட்டானா கஸ்டமர்-க்கு தான் ப்ராப்ளம்.. சோ ஒரு ஒரு வாரத்துக்கு அவளுக்கு ட்ரீட்மன்ட் கொடுக்கனும்.. நம்ம மக்களுக்கு எதாவது பெரிய ப்ராப்ளம்னா கூட்டிட்டு போற அதே ஹாஸ்ப்பிட்டலுக்கு தான் கூட்டிட்டு போறேன்.. அட்மிஷன் போட்டதும் நான் அங்க வந்துட்றேன்.. அப்புறமா வேற யாரையாவது பாத்துக்க சொல்லுங்க‘‘, என வழக்கமாய் நடப்பதைப் போல அவளை வெளியே அழைத்து வந்து ஏர்ப்போர்ட்டிற்கு அழைத்து சென்றேன்..

‘‘நா ஏன் உன் கூட வரலனு கேள்விக்கு பதில நான் சொல்றேன்.. அதுக்கு முன்னாடி சாப்டு‘‘, என விமான நிலையத்தின் உள்ள ஒரு உணவகத்தில் அவளை சாப்பிட வைத்துக் கொண்டிருந்தேன்..

‘‘ எனக்கு 14 வயசாயிருந்தப்ப,உடம்புல  என்ன நடக்குதுனே தெரியாம இருந்த வயசுல, என்ன வீட்ட விட்டு தொரத்திட்டாங்க... வேலைக்குன்னு இங்க வந்து சேர்ந்தேன்.. அப்போ வள்ளி-னு ஒரு அக்கா என்ன அவங்களோட தங்கச்சியாவே நெனச்சு பாத்துக்கிட்டாங்க... பாவம் அவங்க ஒருத்தன நம்பி இங்க வந்து ஒரு புள்ளைய பெத்துக்கிட்டதுக்கு அப்புறம் அவன் அவங்கள இங்க  விட்டுட்டு போயிட்டான்.. ஒரு நாள் என்னயும் இந்த தொழிலுக்கு அனுப்பி வைக்க சொல்லி சொன்னாங்க அந்த அக்கா அப்போ நெனச்சிருந்தா என்னயும் அப்படி அனுப்பியிருக்கலாம்.. ஆனா அவங்க நீ நல்லா வரனும்.. உன்ன யாரும் தப்பா பேசிடக் கூடாது.. பொம்பளைங்கன்னா இதுக்கு மட்டும் தான் அப்ப சொன்ன பேச்சு இப்ப வரைக்கும் நின்னுட்டு இருக்கு.. உங்களையும் அப்படி தான் பேசுறாங்க.. ஆனா நீயும் அப்படி ஆக கூடாது.. சாதிச்சு காட்டனும்.. அதுக்கு நான் ஹெல்ப் பண்றேன்-னு சொல்லி என்ன படிக்க வச்சாங்க...அவங்க போட்ட பிச்சையில தான் நான் இப்போ ஒரு டாக்டரா இருக்கேன்.. இப்படி சில உதவிகளையும் பண்ணிட்டு வர்றேன்.. அவங்களுக்கு அந்த சமயத்துல யாராவது உதவி பண்ணிருந்தாங்கன்னா நெலம வேற மாதிரி இருந்திருக்கும்‘‘, என நெகிழ்வுடன் கூறிய திருநங்கையான வெண்பாவை வியப்புடன் பார்த்தாள் ஸ்ரீ..

‘‘வாழ்க்கையில அடிப்பட்டவன தான் பாவமா பாக்கனும்.. ஆனா இங்க அடிக் கொடுத்தவன தான் பாவமா பாக்குறாங்க.. அடி வாங்கிட்டு வலிய பொறுத்துக்குற எல்லாரையும் ஏளனமாத் தான் பேசுறாங்க.. நீ யோசிச்சு பாரு இப்படி ஆணும் இல்லாம பெண்ணும் இல்லாம இருக்குறது என்னோட தப்பா என்ன?? ஆனா என்ன என்னவோ கொல குத்தம் பண்ணுன மாதிரி பாப்பாங்க.. அதே போல தான் விபச்சாரியா இருக்குறவங்கள கீழ்த் தரமா பாக்க தெரிஞ்ச நம்ம மக்களுக்கு, அவங்க கிட்ட வந்து தன்னோட உடற்பசிய போக்கிக்குறவங்கள ஒன்னும் சொல்லத் தெரியல.. இது மாற இன்னும் காலம் எடுக்கும்.. அது வரைக்கும் அப்பாவியா இப்படி வர்றவங்கள நான்

காப்பாத்த ட்ரைப் பண்ணிட்டு இருப்பேன்.. கண்டிப்பா பண்ணுவேன்'', என கண்களில் ஒரு மின்னலுடன் பேசினாள் வெண்பா..

''வள்ளி அக்கா கொழந்த??''

''அவங்களுக்கு பொண்ணு.. அக்கா இறந்ததுக்கு அப்றம் நா தான் அவள ஆஸ்திரேலியா அனுப்பி வச்சேன்.. அங்க ஃபேமிலியோட இருக்கா.. அவ தான் உன்ன வந்து பிக் அப் பண்ணிக்க போறா.. நா அவ கிட்ட சொல்லிட்டேன்.. சோ டோன்ட் ஒர்ரி.. ஸ்டார்ட் எ நியூ பாசிட்டிவ் லைஃப்'', என அவளது கன்னத்தில் முத்தத்தை பதித்தவள் அவள் விமானத்தில் ஏறும் வரை நின்று வழியனுப்பி வைத்தாள்..

விடுதிக்கு செல்லாமல் வள்ளி உறங்கியிருந்த கல்லறைக்கு வந்தவள் அதன் மீது மற்றொரு பூவை வைத்தாள்.. அத்துடன் 23 பூக்கள் சேர்ந்ததை எண்ணி வள்ளியும் சிரித்தால்போல...

நல்ல மனம் கொண்டவர்கள் இருப்பதைக் கண்ட வருண பகவானும் சிரித்தான் போல.. மழைத்துளிகள் வெண்பாவையும் வள்ளியையும் நனைத்துச் சென்றன..

--
**கனிமொழி**





S.K. அபிநயா
கைவண்ணத்தில்

# பால் பொங்கும் பச்சத்தண்ணி எப்படி பொங்கும்?

சரசுவதி நதி பற்றி உங்களுக்கு தெரியுமா?

அப்படி ஒன்று இருந்தால் தானே நமக்கு தெரியும், ஆனால் அப்படி ஒரு நதி இருந்ததாக வந்தேரிய ஆரியர்கள் கூறுகிறார்கள். ஆதாரம் கேட்டால் வேதங்களில் உள்ளது, புராணங்களில் உள்ளது என புருடா கதைகளை கூறி கம்பு சுற்றிக்கொண்டு திரி(த்து)கிறது இந்த கூட்டம்.

எப்படி தெரியுமா, சரசுவதி நதி புரணக்காலத்தில் இமயத்தில் உற்பத்தியாகி கங்கைக்கும் யமுனைக்கும் நடுவே ஓடி அலகாபாத் நகரின் திரிவேணி சங்கத்தில் கலந்ததாகவும், தற்போதும் அந்த நதி கண்ணுக்குத் தெரியமல் பூமிக்கு அடியில் ஓடிக்கொண்டு இருப்பதாக ஒரு பக்கமும், சில இந்துத்துவவாதிகள் கரியானா மாநில ஆதிபத்ராவில் உற்பத்தியாகி கரியானா, ராச்சசுத்தான், குசராத் வழியாக தெற்கே சென்று கட்ச் அருகில் கடலில் கலக்கிறது. என்றும் அறிவுக்கு விரோதமான வாதத்தை செய்து வருகிறார்கள்.

இந்த பகுதிகளை முன்பு அகழாய்வு செய்த மேரி ஆக்னச் கவுண்டி குழுவினர் (1980-87) கடந்த பத்தாயிரம் ஆண்டுகளில் இந்த பகுதியின் ஊடாக இமயத்தில் இருந்து எந்த நதியும் பாய்ந்திருக்க வாய்ப்பே இல்லை என அறிவியல் பூர்வமாக நிறுவியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இல்லாத ஒரு நதியை கூறி இன்று வரை அகழாய்வு நடத்து வருகிறது. இதற்கு பல கோடி செலவு செய்து வருகிறது பல ஆண்டுகளாக, ஆனால் பூம்புகார் கடல் அகழாய்வு அப்போதே நிறுத்திவிட்டார்கள் மற்றும் ஆதாரங்களும் தொல்லியல் எச்சங்களும் மிகுந்து இருக்கும் கீழடியை கண்டுக்கவே இல்லை. இதிலேயே புரியும் ஒன்றிய அரசின் நோக்கம் என்னவென்று.

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் குசராத் தொலவீரா என்ற இடத்தில் மிக பெரிய அளவில் அகழாய்வு நடந்தது. அது முழுக்க தமிழர் நாகரிகமே இருந்தது. ஆகையால் சுதந்திரத்துக்கு பிறகு இந்திய அரசு அந்த அகழாய்வை நிறுத்தி விட்டு அந்த இடத்தில் குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட ஒதுக்கி முழுமையாக அந்த இடத்தை அழித்து விட்டது.

அதேபோல் 1999ம் ஆண்டில் இந்தியாவின் மிக பெரிய அருங்காட்சியகமான சத்திரபதி சிவாஜி அருங்காட்சியகத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்த சிந்துசமவெளி அகழாய்வில் கிடைத்த பொருட்கள் இருந்த இடத்தில் தமிழர் நாகரிகத்தின் எச்சங்கள்

என்ற பெயரை எடுத்துவிட்டு அடையாளம் தெரியாத நாகரிக மக்கள் வாழ்ந்த இடம் என்று மாற்றி வைக்கப்பட்டுள்ளது.

சிந்துசமவெளி முதல் பூம்புகார் ஆதிச்சநல்லூர் தற்போதைய கீழடி என இந்தியா முழுவதும் உள்ள நாகரிகம். ஏன் பாக்கிசுதானில் உள்ள கரப்பா, மொகஞ்சதாரோ, ஆப்கானிசுத்தான் என அனைத்து பகுதிகளிலும் தமிழர் நாகரிகமே தலைத்தோங்கி நிற்கிறது, அதில் எதிலுமே மத அடையாளம் ஏதுமில்லை. அதை ஏற்க முடியாத ஆரிய இந்திய அரசால் அவற்றை சிதைக்கவும் ஆரியர் வரலாற்றை திரிக்கவும் செய்து வருகிறது.

ஆக இது வரையிலும் அவர்களால் நிரூபிக்க முடியவில்லை இல்லாத நதியையும் நாகரிகத்தையும் எப்படி நிரூபிக்க முடியும்? பால் பொங்கும் பச்சத்தண்ணி எப்படி பொங்கும் என்ற கதைதான் அவர்கள் கூற்று. ஆனால் இன்றும் அப்படி ஒரு நதி இருந்ததாக அவர்கள் கதைகளும் கட்டுரைகளும் எழுதி வருகிறார்கள்.

ஏன் இப்படி என்றால் அதற்கு நுட்பமான காரணம் உள்ளது. ஆரியர்கள் வந்தேரிகள் என்பது நிற்பனமான ஒன்று. இந்த கருத்தின் உண்மையை மறைத்து நாங்களே அதாவது ஆரியர்களே இந்தியாவின் பூர்வகுடி மக்கள், சரசுவதி நதி கரையின் நாகரிகம் தான் முதன்மை, நாங்களே உலகின் பல இடங்களுக்கு சென்று நகரங்களை உருவாக்கினோம் என்று கட்டுக்கதைகளை அவிழ்த்து விட எளிதாக இருக்கும். இந்த நதி கரை நாகரிகத்தில் வந்த சமசுகிருத மொழியே உலகின் மூத்த மொழி என்று ஒரு பொய்யை உண்மையாக்க முடியும்.

என்ன மல்லுக்கட்டினாலும் சரி, வரலாற்றை மாற்ற மறுக்க முடியாது. குப்தர்கள் ஆட்சி காலம் வரை சமசுகிருதம் என்ற மொழியே உருவாகவில்லை. அதன் பிறகு தான் என்று வரலாறு கூறுகிறது.

அப்படி இருக்க சமசுகிரதம் எப்படி தமிழுடன் ஒப்பிட முடியும். சமசுகிரத மொழிக்கு ஆதி மொழி வடிவம் என்பது ஏதும் இல்லை, இதுவும் தெலுங்கு , மலையாளம்,கன்னடம், இன்னும் பல மொழிகளில் போல சமசுகிருத மொழியும் தமிழில் இருந்தே உருவானது என்பது வரலாற்று ஆய்வுகள் கூறும் உண்மை.

தமிழர்கள் முதலில் ஒலிகளை எழுப்பி, படங்களை வரைந்து பிறகு கோடுகள் வரைந்து மொழி உருவானது. அதன் பின் தமிழி என்ற எழுத்துக்களை உருவாக்கினர், பின் வட்டெழுத்து உருவானது. பின் தமிழ் எழுத்துக்கள் உருவானது. இது அனைத்திற்கும் வரலாற்று சான்றுகள் உள்ளன.

நான் சமசுகிருத மொழியை தாழ்த்தி தமிழை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த பதிவு அல்ல. தமிழை உயர்த்த வேண்டிய அவசியமும் நமக்கு ஏற்பட

போவதுமில்லை. ஏனெனில் அது அனைத்திலும் சிறந்த வளர்ந்த மொழி இதை உலகம் அறியும்.

இருப்பினும் தமிழில் இருந்து தோன்றி சமசுகிருத மொழி தற்போதைய நிலையில் அது வீழ்ந்து போன மொழி யாரும் தவறாக எண்ண வேண்டாம், அதான் உண்மை. இன்றைய நிலையில் அது வேத மந்திரங்களை தவிர வேறு எங்கும் பயன்பாட்டில் இல்லை என்பதே உண்மை. இந்திய அரசு அங்கீகரிக்கப்பட்ட அலுவல் மொழியில் சமசுகிருதமும் ஒன்று. ஆனால் அது மற்ற மொழி அளவு புழக்கத்தில் இல்லை.

இதுதான் சரசுவதி நதி, நாகரிகம், சமசுகிருத நிலை எதற்கும் ஆதாரம் இல்லை. இப்படி உயிர் அற்ற உண்மை அற்ற ஒரு மொழியை தமிழோடு ஒப்பீடு செய்வது எவ்வளவு பெரிய களவாணித்தனம். பச்சத்தண்ணி எப்படி பொங்கும்.?

தமிழர்கள் மொழி பண்பாடு நாகரிகம் கலை இலக்கியம் என அனைத்திலும் தொன்மையை உடையவர்கள். அதில் சிறந்ததும் விளக்கியுள்ளனர் என்பது வரலாறு கூறும் உண்மை. இதனை ஏற்க முடியாத ஆரியர்களும் சில உலக நாடுகளும் அந்த தொல்லியல் ஆதாரங்களை அழித்தொழித்து வருகின்றனர். தமிழும் தமிழர்களும் போற்றப்பட வேண்டியவர்கள் என்பதை உலகம் ஒருநாள் உணரும்.

தமிழுக்கு ஆதி உண்டு, அந்தம் இல்லை
தமிழை நேசிப்போம் சுவாசிப்போம்..!

தமிழில் பேசுவோம்.!!
வாழ்க தமிழ் வெல்க

**- மனோ குணசேகரன்**
புள்ளவராயன் குடிக்காடு

### S.K. தரணி





# நாட்குறிப்பு

மௌன மொழிகளின்
சேகரிப்பு வங்கியே!

இரகசியமாக வாழும்
இரகசியங்களின் ஆவணமே!

மடியில் வைத்து ஊட்டுகிறேன்
எழுதுபொருள் மை கொண்டு!

உன் ஏடுகளில் வாழ்கிறது
இறந்த கால சுய வரலாறு!

அவளை விட அதிகம் தாங்கியது
நீ தான், எனது காதலை
கவிதையாக!

எனது காதல்
இன்னமும் வாழ்கிறது
உன்னிலும் என்னிலும்
மட்டும்!

உன்னை விரிக்கையில்
என்னையே நான்
குவிக்கிறேன்
உன்னில்!

உன்னைத் திறக்கையில்
திறக்கிறது
இதயமும் வாசலை!

வாசல் மட்டுமல்ல...
அறை முழுவதும்
வார்த்தை கோலமிடுகிறது
குவித்த விரல்கள்!

இரவுத் தென்றல்
தீண்ட தீண்ட
தீண்டிக் கொண்டே இருக்கிறேன்
உன்னை!
நீயோ...
மேலும் மேலும்
தீண்டிக் கொண்டே இருக்கிறாய்
என்னை!

ஒருநாள் முழுவதையும்
அடைத்து விட்டேன்
ஒரு வெள்ளைப் பக்கத்தில்...
என்னை விடுதலை செய்ய!

கிறுக்கல்கள் எல்லாம்
மேனியில் நரம்பாக ஓட
உணர்வுகளாய்
தினம் தினம்
எத்தனை மொழிகள்!

கசங்கிய பக்கத்தில்
நான் மட்டும் நுகர்கிறேன்
சிந்திய
கண்ணீர்துளியின் வாடை!

காதலை பேசுகிறது
பொதுவுடைமை பேசுகிறது
வலிகளில் அழுதது
புரட்சியும் ஊட்டியது
எழுதிய கரு நீல செம்மை!

இன்று
உன்மேல் தவழ்கிறது
உன்னைப் பாடி!

நாட்குறிப்பே!
இதய நா வின்
குறிப்பு நீ!

– சா. கா. பாரதி ராஜா
9944315732, 8610078040

# அமர்நாத் பயண அனுபவம்...



விஜயகாந்த்

இந்த கட்டுரை அமர்நாத் பயணம் செல்ல விரும்பும் மக்களுக்கு நல்ல ஒரு தகவல் கட்டுரையாக இருக்கும்

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் அமர்நாத் பயணம் குறித்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. அறிவிப்பு வெளியான உடனே ரயில் நிலையத்தில் டிக்கெட் முன்பதிவு செய்யலாம். ஜூலை மாதம் கணக்கில் கொண்டு டிக்கெட் முன்பதிவு செய்ய வேண்டும்.

அதாவது சென்னை to டெல்லி தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் இரவு 10.30 டெல்லி to ஜம்மு 9.15 ஜீலம் எக்ஸ்பிரஸ்...

ஜீலம் எக்ஸ்பிரஸ் மட்டும் தேவைப்பட்டால் ஏசி கோச் புக் செய்து கொள்ளவும். ஏனெனில் ரயில் அவ்வளவு சுத்தம். மக்களும் சுத்தம் என்றால் அதன் அர்த்தம் என்ன என்று கேட்பார்கள்? நாங்கள் சென்ற ரயிலில் தண்ணீர் வரவில்லை, அப்படி இருக்கும் போது ரயில் எப்படி இருக்கும் என்பதை உங்கள் கற்பனைக்கே விடுகிறேன். ரயில் பயண டிக்கெட் செலவு ரூ. 2650.

சரியான திட்டமிடல் இருந்தால் நேரடியாக ஜம்மு பிளைட் இருக்கிறது, அதையும் புக் செய்யலாம்.

ரயில் முன்பதிவு செய்து முடித்தவுடன் அமர்நாத் யாத்திரை குறித்த தேதி அறிவிப்பு வெளியான சில நாட்களில் amarnathyathra.com என்ற வெப்சைட்டில் சென்று மருத்துவ சான்றிதழ் படிவத்தை தரவிறக்கம் செய்து உடற்தகுதி சான்றிதழ் அதாவது blood pressure, Ecg, sugar, குறித்த மருத்துவ அறிக்கை பெற்று விண்ணப்பத்தில் அந்தந்த மாவட்டத்திற்கு அருகில் உள்ள மருத்துவர் பெயர் வழங்கப்பட்டிருக்கும் அந்த குறிப்பிட்ட மருத்துவரிடம் கையெழுத்து பெற்று கொண்டு ஜம்மு காஷ்மீர் JK BANK வங்கி செல்ல வேண்டும்.

ஜம்மு காஷ்மீர் வங்கிகள் சென்னையில் உள்ளது. மற்ற மாவட்டங்கள் பற்றி எனக்கு தெரியவில்லை (இன்டர்நெட்டில் தேடவும்) அங்கு விண்ணப்பம் படிவம் பூர்த்தி செய்து அமர்நாத் யாத்திரை செல்வதற்கான பெர்மிட் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு 3 புகைப்படம் தேவை, ஆதார் அட்டை கட்டாயம்.
அமர்நாத் யாத்திரையை மேற்கொள்ள இரண்டு வகையான பாதைகள் உள்ளன.

1. பால்டா வழியாக செல்வது
    குறைந்த தூரம் (14 கி.மீ) கொண்ட இந்த பாதை வழக்கமான பாதை இல்லை. இங்கு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு சில வருடங்களுக்கு முன் ஆட்கள்

கொல்லப்பட்டனர். அதனால் பெரும்பாலோர் விண்ணப்பம் செய்வதில்லை. ஆனால் இந்த வருடம் அதிகம் இந்த வழியாக மட்டுமே வந்தனர்.

2. பெகல்காம் வழியாக செல்வது

மிகவும் கடினமான பாதை, பாதுகாப்பு நிறைந்தது. தூரம் அதிகம் 36 கிமீ. இந்த பாதை இந்தியாவில் உள்ளதால் பாதுகாப்பு நிறைந்ததாக கருதப்படுகிறது.

இதில் ஒரு வழியை பூர்த்தி செய்து வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கு ஆதார் அட்டை கட்டாயம் மற்றும் 3 புகைப்படம் தேவை. வங்கி சம்பந்தப்பட்ட வேலை, மருத்துவ அறிக்கை எல்லாம் சேர்த்து 1500ரூ செலவாகும்.

இது முடித்தவுடன் வங்கிகள் உங்களுக்கு அனுமதி வழங்கிவிடும். இதையடுத்து ஜூலை மாதத்திற்கு உரிய உங்கள் பயண திட்டங்களை தொடங்கலாம்.
அமர்நாத் பயணத்திட்டத்தை சரியாக செய்து விட்டால் நீங்கள் நிச்சயமாக பயணத்தில் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

எல்லா பொருட்களும் பெகல்காம் கேம்ப்பிலேயே கிடைக்கும். அதனால் கொஞ்சம் வசதி படைத்தவர்கள் எல்லாவற்றையும் தூக்க வேண்டிய அவசியமில்லை.

1. மங்கி குல்லா
2. ஸ்வெட்டர்
3. Shoe
4. Jeans 1
5. கையுறைகள்

மறுபடியும் சொல்கிறேன், இவையெல்லாம் அங்கேயே கிடைக்கிறது.

மற்றபடி அவர்களது தேவைக்கேற்ப துணிகள், எவ்வளவு உடைகள் குறைவாக எடுத்து வருகிறீர்களோ அது உங்கள் பயணத்தை சுலபமாக மாற்றுவது நிச்சயம். நிறைய இடங்களில் தங்க நேரிடும், துவைத்து கொள்ளலாம். எங்களுடன் வந்த 55 வயது நபர் இரண்டு வேட்டி சட்டை ஒரு ண்டணினு மட்டுமே எடுத்து சிறப்பாக முடித்தார். ட்ரெக்கிங் பேக் வாங்கி அதுவே எனக்கு சுமையாக மாறிவிட்டது. இன்னும் எளிமை தேவை என்பதை நடக்கும் போது தான் உணர்ந்தேன். வித்தியாசமான ஸ்டில் கொடுக்கனும், வித விதமான ட்ரெஸ் போடுவது எல்லாம் எடுபடவில்லை. 36 கிமீ தொலைவுக்கு யாரும் இருக்கப்போவதில்லை. நம்முடைய சுமை நமக்கு பாரமாகும் போது நம்மால் இயற்கையின் அழகை ரசிக்க முடியாமல் போய்விடுகிறது. அதனால் முடிந்தளவு சுமையைக் குறைத்துக் கொள்ளவும்.

உணவை பற்றி கவலையே இல்லை. அதனால் ரயில் பயணத்திற்கு தேவைப்பட்டால் உணவை எடுத்துக் கொள்ளலாம்.

அமர்நாத் பயணம் ஜூலை 2ந்தேதி சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் மன்னிக்கவும், MGR ரயில் நிலையத்தில் கிளம்பும் போது ஒரு முகத்தையும் தெரியாது, மொத்தம் 24 பேர் அவ்வப்போது சின்ன புன்முறுவல் என ரயில் பயணம் சென்றது.

ஜூலை 4-ந்தேதி காலை டெல்லி இறங்கினோம். ஒருநாள் தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இறங்கியவுடன் இரயில் நிலையம் அருகில் ''விஸ்வகர்மா மந்தீர் கமிட்டி'' என்ற அமைப்பு செயல்படுகிறது. இங்கு வெளியூரில் இருந்து வேலை தேடி வருபவர்கள், வேலை நிமித்தமாக டெல்லி வருபவர்கள், யாத்திரை பயணம் செய்பவர்கள் மூன்று நாட்கள் வரை தங்கி கொள்ளலாம். அதற்கு நூறு ரூபாய் வாடகை கட்டணம் பெறப்படுகிறது. இடம் நன்றாக இருக்கும். இரவு 9.30 வரை தங்கலாம், அதற்கு மேல் அடுத்த நாள் கணக்காக வைத்து இன்னும் நூறு ரூபாய் செலுத்த வேண்டும்.

குடும்பத்துடன் சென்றால் தனி அறை வசதி உள்ளது. ஒரு நாள் வேலைக்காக டெல்லி வருபவர்கள் இந்த மாதிரி அமைப்பை பயன்படுத்திக் கொள்வது செலவைக் குறைக்கும்.

டெல்லி ரயில் நிலையம் எதிரே தமிழ்நாடு ஓட்டல் என்ற இடத்தில் சாப்பிடலாம், நன்றாக இருந்தது. உரிமையாளர் திருநல்வேலிக்காரர், அங்கு சென்றாலே தமிழில் பேசித்தான் சாப்பிடவே கூப்பிடுவார்கள். (மறக்காமல் அந்த கடைக்கு அருகில் லெஸ்ஸி சாப்பிடுங்க..)

அந்த இடத்தை விட்டு வெளியே வந்தவுடன் ஒரு ட்ராவல்ஸ் அமைப்பை வைத்து பஸ்ஸை வாடகைக்கு பிடித்து ஒரு ஆளுக்கு 300 என டெல்லியை சுற்றி பார்த்தோம். இந்திராகாந்தி நினைவிடம் மட்டும் வலியை தந்தது. கடைசி நாளில் அவரை சுட்ட இடம் அவர் உடுத்திய சேலை இவையெல்லாம் பார்த்தவுடன் ஒரு கனத்த இதயத்துடன் அங்கிருந்து கிளம்பினேன்.

டெல்லி பயணம் முடிப்பதற்குள் எல்லோரும் பழக்கமாகி விட்டார்கள், ஒரு சகஜ நிலைக்கு வந்து விட்டேன்.

அன்றைய இரவு ஜம்மு பயணம் தயாரானோம்..

ஜூலை 5 இரவு 9.15 க்கு வர வேண்டிய ரயில் 10.30க்கு வந்தது. எனக்கு கொஞ்சம் சகிப்புத்தன்மை இருக்கும். ஆனால் இந்த முறை அதற்கு மேலும் சகிப்புத்தன்மை தேவைப்பட்டது. ஜம்மு ரயில் சுத்தமாக இல்லாதது, உடலின் நேரக்கடமைகளை

சரியாக முடிக்க முடியவில்லை. தூக்கம் வரவில்லை. வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். என் உடலின் தினசரி கடமைக்காக ஒரு இடத்தை பார்த்து தேர்ந்தெடுக்க முடியவில்லை. 12.30 மணி வரை எதையும் சாப்பிடவில்லை தண்ணீர் நாக்கை நினைக்க மட்டுமே பயன்படுத்தி 12.30க்கு ஜம்மு வந்து சேர்ந்தோம். ஜம்மு சேரும் இரண்டு மணி நேரத்திற்கு முன்பு இந்திய சிம்கார்டு நெட்வொர்க் எல்லாம் கட் ஆகிவிடுகிறது.

ஜம்மு என்றதும் சினிமாவில் வருவது போல் இறங்கியவுடன் ஒரே குளிராக இருக்கும் என நினைத்து இறங்கினால் சென்னை வெயில் எவ்வளவோ பரவாயில்லை என்று தோன்றியது. இவ்வளவு வெயிலில் பனியை எங்கே தேடுவது என்ற ஏக்கத்துடன் ஒரு டெம்போ பிடித்து ஜம்மு ‘‘பகவதி நகர் base camp’’ சென்றோம்.

ஐந்தடுக்கு பாதுகாப்பு முடித்து விட்டு உள்ளே சென்றவுடன் நம் வேலை முடிந்து விடாது.

அங்கு தங்க அறை புக் செய்ய வேண்டும். ஏசி மற்றும் ணணிண ச்ஞி அறை, மிகப்பெரிய ஹால் அதில் 50 நபர்களுக்கு மேல் தங்கலாம், அதில் நாமும் தங்க வேண்டும். ஒரு ஆளுக்கு Non ACஅறை 50 ரூபாய் வாடகை மற்றும் AC அறை 100 ரூபாய்.

அடுத்த நாள் பெகல்காம் போவதற்கு பேருந்து பதிவு செய்ய வேண்டும். இங்கு தான் பெருங்கூட்டம் காத்திருக்கும். அங்கு வரிசையில் நின்று பதிவு செய்ய வேண்டும். அதற்கான கட்டணம் தேர்வு செய்யும் பேருந்தை பொறுத்து அமையும் அதிகபட்சமாக 650ரூ, குறைந்த பட்சம் 420ரூ. தனியார் நிறுவனமும் வெளியே பதிவு செய்யும். ஆனால் அதன் பாதுகாப்பு இராணுவத்தின் உதவியில் வராது. இந்த நிலையில் உங்கள் பயணத்தின் போது பெண்கள் இருந்தால் எல்லா இடங்களிலும் கூட்டம் குறைவாக இருக்கும், விரைவில் வேலை முடியும்.

தேவைப்பட்டால் வீட்டுக்கு பேச புதிய சிம் வாங்கி கொள்ளலாம். அதற்கு வாக்காளர் அடையாள அட்டை முக்கியம். எல்லா நெட்வொர்க் கிடைக்கிறது ஆனால் ஆகுமீ்ஃ பனி லிங்கம் வரை பேச முடியும். மற்ற நெட்வொர்க் 3 கிமீ முன்னால் கட் ஆகிவிடும்.

உள்ளே வந்தவுடன் நம்முடைய சாப்பாடு ருசி என எல்லாவற்றையும் புதைத்து விடவும். இங்கு சாப்பாடு, ரொட்டி, பருப்பு, பாயாசம் என எல்லாம் வழங்கப்படும் ஆனால் அவை பசியை மட்டுமே போக்கும். இந்த பயணத்தில் உணவுதான் பேராபத்து, எவ்வளவு குறைவாக உண்கிறோமோ அந்த அளவுக்கு நமக்கு பாதுகாப்பு. ஏனெனில் இரண்டு மணிக்கு எழும் போது வயிறு பிரச்சனை நிறைய வர வாய்ப்புகள் அதிகம். வயிற்றில் ஒன்லி இன்கமிங் மட்டுமே, அவுட் கோயிங் ரொம்ப rarely நடக்கும்.

தமிழ்நாட்டில் 6 மணி ஆகும் போது இருட்டி விடும். ஆனால் ஜம்முவில் இரவு 8 மணிக்கு தான் இருட்டுகிறது. எல்லாம் முடிந்து தூங்கும் போது இரவு 11 மணி.

அடுத்த நாள் காலை 2 மணிக்கு காஷ்மீர் பயணம்..

ஜம்மு to காஷ்மீர் பயணம் 280 கிமீ அப்படி செல்லும் பயணத்தில் பேருந்தின் வலது பக்கத்தில் உட்கார இடம் கிடைத்தால் 10 மணி நேரம் இயற்கை உங்களுக்கு சொந்தம். பேருந்தில் எவ்வளவோ பயணிகள் பயணம் செய்தாலும் சத்தமாக இருந்தாலும் காதலர்கள் உலகம் தனியாக இருக்கும், அப்படி ஒரு அனுபவம் தான் இந்த பயணத்தில் இருக்கும்.

முன்னும் பின்னும் ராணுவ வீரர்கள் பாதுகாப்புடன் பயணம். 280கிமீ தூரமும் BSF, CRPF, JAMMU POLICE என வரிசையில் நிற்பார்கள் அதில் 5 பேருக்கு 3 பேர் மலை மற்றும் வீடுகளை பார்த்த வண்ணம் நிற்பார்கள் (பாதுகாப்புக்காக) இந்த பயணத்தில் இந்திய ராணுவமும் இந்திய அரசின் செயல்பாடும் போற்றுதற்குரியது.

இடையில் ஒரு முறை தான் நிறுத்தப்பட்டது, உணவு விடுதியில் எல்லா வகையான உணவும் கிடைக்கும், இலவசம் தான் ஆனால் அளவோடு எடுத்துக் கொண்டால் வயிற்றுக்கு பாதுகாப்பு.

4 மணியளவில் பெகல்காம் செக்கிங் முடித்து விட்டு உள்ளே போய் தங்க இடம் புக் செய்ய வேண்டும். இங்கு வேறவந்து சேர்ந்தவுடன் எல்லாம் பாதுகாப்பு படையில் வந்து விடும்.

இங்கு தான் நீங்கள் தவற விட்ட பொருட்களை வாங்க முடியும். எல்லா பொருட்களும் 20% அதிகம். ஆனால் யாரும் ஏமாற்றவில்லை, கண்டிப்பாக நம்பலாம்.

மற்ற இடங்களை வைத்து பார்க்கும் போது பெகல்காமில் உணவு நன்றாகவே இருக்கும். 30 க்கும் மேற்பட்ட இலவச உணவு விடுதிகள் இருக்கும். தமிழ்நாட்டு உணவும் வெரைட்டி நிறைய கிடைக்கும்.

தங்குமிடத்திற்கு ரூ 500 செலுத்த வேண்டும், பெட்சீட் வழங்கப்படும் கொஞ்சம் சுத்தம் பார்ப்பவர்கள் பெட் சீட் புதிதாக வாங்கி கொள்ளலாம்.

தண்ணீருக்கு பிரச்சனை இல்லை. ஆனால் தண்ணீர் தான் மிகப்பெரிய பிரச்சனை. இங்கு வரும் நீர் பனி உருகி வரும் தண்ணீர். ஒரு நிமிடம் தொடர்ந்து கை வைத்து இருந்தால் சகஜ நிலைக்கு வர சிறிது நேரம் எடுக்கும் அவ்வளவு ஐஸ்கட்டி போல் இருக்கும். குளிப்பதற்கு தேவைப்பட்டால் சுடு தண்ணீர் 40ரூ கொடுத்து வாங்கி கொள்ளலாம்.

டாய்லெட் ரூம், பாத்ரூம் என எதுவும் பிரச்சனை இல்லை ஆனால் தண்ணீர் ஐஸ்கட்டி போல் இருப்பதுதான் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது.

வழக்கம் போல 8 மணிக்கு மேல் தான் சூரிய ஒளி குறைய ஆரம்பித்தது. அடுத்த நாள் காலை 5 மணிக்கு அமர்நாத் யாத்திரை துவங்கியது...

7/7/2019 காலை 5 மணிக்கு செக்கிங் முடித்து விட்டு 5.30 மணிக்கு மொத்தமாக கிளம்பினோம். வெளியே வந்து ஒரு ஆளுக்கு 150க்கு ஒரு வேன் பிடித்து 10 பேர் சந்தன்வாரி செக்கிங் பாயிண்ட் வரை செல்ல வேண்டும். அது 15 கிமீ தொலைவில் உள்ளது. அங்கு சென்றவுடன் லத்தி 20ரூ வாங்கி pisutop செக்கிங் பாயிண்ட்டில் வரிசையில் நிற்க வேண்டும். ‘‘எல்லா இடங்களிலும் உங்கள் பேங்க் பெர்மிட் மிகவும் அவசியம்‘‘

இங்கிருந்து பயணம் ஆரம்பம்

குதிரை பயணம் வேண்டுமெனில் 2500 ரூபாய், கொஞ்சம் நிறைய பேருடன் சென்றால் 1500க்கு முடிக்கலாம்

ஹெலிகாப்டர் பயணம் தேவையெனில் 3105 செலுத்த வேண்டும். கொஞ்சம் தெளிவாக ரிட்டர்ன் புக் செய்து விட்டால் நல்லது. ஏனெனில் பெரும்பாலும் அங்கிருந்து ஒன்வே ரிட்டர்ன் கிடைப்பதில்லை.

நடைபாதை பயணம் எப்படி இருந்தது என்பதை உதாரணமாக கூறினால்

‘‘ஒரு நீளமான கம்பை நேராக நிறுத்தி அதை 91 டிகிரி சாய்வாக வைத்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது மலை’’

பாதை இல்லை, கல், மேடு பள்ளம் என எங்கும் சமமான ரோடுகள் சிறிதளவு கூட கிடையாது. நிறைய நடந்து பழகி உடல் உறுதியாகவும் மனதை திடமாகவும் வைத்து பழகியவர்களுக்கு இந்த பயணம் அற்புதமான அனுபவம்.

முதல் 2 கிமீலேயே சோர்ந்து போய் விட்டேன். ஏனெனில் என்னுடைய பேக் வெயிட் ஒரு பக்கம் என்னை பாடாய்படுத்தியது. இதில் கிளம்பும் போது overcoat, மப்ளர், கேப் என போட்டது வியர்த்து கொட்டியது, வேறு வழியில்லை சுமையை குறைத்தே ஆக வேண்டிய கட்டாயம். அப்போது என்னுடன் வந்த அக்கா சிவபாக்கியம் நடக்க முடியாத நிலை. குதிரையில் செல்ல ஏற்பாடு செய்தோம். அவரிடம் என்னுடைய ஓவர்கோட் சில பொருட்களை கொடுத்ததால் பாதி சுமை குறைந்தது, கொண்டு சென்ற எல்லா நொறுக்கு தீனிகளையும் அங்கு இருந்த குழந்தைகளுக்கு கொடுத்து விட்டேன்.

கிட்டத்தட்ட 14 கிமீ யாருடனும் பேசாமல் நான் மட்டுமே நடந்து சென்றது என் வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவம். என்னுடன் வந்தவர்கள் எனக்கு முன்னால் சென்றுவிட்டார்கள், அதற்கு வருத்தப்படவில்லை. ஏனெனில் இங்கு வந்த காரணம் எனக்கும் என் குறிப்பிட்ட நட்பு வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே தெரியும், அதனால் அங்காங்கே இயற்கையை ரசித்தும், போட்டோ எடுத்துக் கொண்டும் சென்றேன்.

இடையில் 3 இடத்தில் உணவு வழங்கும் இடம் இருக்கும். 3 இடத்திலும் 30க்கும் மேற்பட்ட டாய்லெட் வசதி செய்யப்பட்டுள்ளது.

ஒரு 8கிமீ முடியும் போது கால் மட்டும் உயிர்ப்புடன் நடக்கிறது. சில இடங்களில் வித்தியாசமான ஆடுகள், ஆங்காங்கே மாடுகள், இடையில் குதிரை பயணம் செல்பவர்கள் என்று தொடர்கிறது எந்த சத்தமும் துளி கூட இல்லை ‘‘என்னுடைய மூச்சு காற்றின் சத்தம் எனக்கே கேட்கிறது‘‘ அவ்வளவு நிசப்தம்..

12 கிமீ வரும் போது காலநிலை முற்றிலும் மாறிவிட்டது. பொறுக்க முடியாத குளிர், எங்கு பார்த்தாலும் பனி உறைந்து கிடந்தது. Light weight overcoat வைத்திருந்ததால் ஓரளவு குளிரை பொறுத்துக் கொண்டு 16கிமீ ல் சேஸ்னாக் (sheeshnag) camp வந்து சேர்ந்தேன். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 8000 அடி உயரம்.

பனி மிகவும் அதிகமாக இருந்தது, நடந்து வந்த களைப்பில் சீனியர்கள் ஏற்கனவே டென்ட் எல்லாம் ரெடி பண்ணி வைத்திருந்தார்கள், தங்குவதற்கு 500ரூ ஆனது.

என்னை விட 15 வயது மூத்தவர்கள் அதிக சுறுசுறுப்பாக இயங்கியது எனக்கு மிகப்பெரிய பாடம். அவர்களை ஒப்பிடும்போது நான் ஒன்றுமே இல்லை. ஒரு சில சீனியர்கள் ஆச்சரியப்படும் அளவிற்கு சுறுசுறுப்பாக இருந்தனர். உடலை பற்றிய ஒரு புரிதல் அவர்களை பார்க்கும் போது தான் ஏற்படுகிறது. சென்ற 28 பேரில் முதலில் வந்தவர்கள் மனோகர் அய்யா வயது 63, ரவிசங்கர் வயது 58 இருக்கும். (இவர் shoe, jeans என எதுவும் போடவில்லை) ஆச்சரியமாக இருந்தது. எப்படி சாத்தியம் என்று அவரிடம் கேட்டபோது அவர் சொன்னது

‘‘ஐயா சிவபக்தனுக்கும் சிவனடியாருக்கும் நிறைய வித்தியாசம் உள்ளது’’ என்றார்.

இதை நமது தலைமுறைக்கு தகுந்த முறையில் சொல்வதென்றால்

‘‘ஒரு காதலன் தன் காதலியை பார்க்க செல்வதற்கும் ஒரு கணவன் தன் மனைவியை பார்க்க செல்வதற்கும் உள்ள வித்தியாசம்’’

சேஸ்னாக் வந்தால் கொடுமையே உடல் கழிவு வெளியேற்ற வேறு உடை அணிய முடியாது குளிர் அதிகமாக இருப்பதால் ஜீன்ஸ் பேண்ட், shoe போட்டு தான் பாத்ரூம் போக முடியும். தண்ணீர் குளிர்ச்சி பெகல்காமை விட ஐம்பது மடங்கு அதிகமாக இருந்தது.

அடுத்த நாள் திட்டம் பேசப்பட்டது, கடந்த ஏழு வருடங்களில் இல்லாத பனி இந்த வருடம் அதிகம் இருப்பதால் எல்லோரும் குதிரையில் செல்ல வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. உண்மையில் எனக்கு இதில் கொஞ்சம் கூட விருப்பமில்லை ஆனால் வேறு வழியும் இல்லை. அடுத்த நாள் குதிரை பயணத்திற்கு முன்கூட்டியே சொல்லி வைக்கப்பட்டது. ஒரு ஆளுக்கு ரூபாய் 2000 என பேசப்பட்டது.

இரவு சாப்பிடவில்லை, வந்த களைப்பில் அப்படியே தூங்கி விட்டேன். சில நல்ல உள்ளங்கள் சாப்பிட அழைத்தாலும் போக விரும்பவில்லை. அன்றைய இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. ஆனால் எழுந்திருக்க மனமும் இல்லை.

காலை 5 மணிக்கு குதிரையில் கும்பா செல்ல வேண்டும் (அதாவது அமர்நாத் பனி லிங்கம் அமைந்திருக்கும் இடத்திற்கு 3 கிமீ முன்னால்)

8/7/19 காலை 4.30க்கு நன்றாக வெளிச்சம் இருந்தது.  எங்கேயோ ஒரு இடத்தில் ‘‘கரம் பானி’’ என்று கத்திகொண்டு இருந்தான். சந்தோஷமாக 20ரூ கொடுத்து வாங்கினேன்.

எல்லோரும் அடுத்த அரைமணி நேரத்தில் குதிரை இருக்கும் இடத்தில் ஒன்று சேர்ந்தோம். இது தான் முதல் முறை குதிரை பயணம், எப்படி ஏறி அமர்வது என்று கூட தெரியாது, அதற்கு சில சூட்சுமம் இருப்பது தெரிந்தது. அதற்கு முன்னர் குதிரைக்காரர்களை பற்றி தெரிந்துக் கொள்வோம்.

கோடா ஓட்டுபவர்கள் எல்லோரும் இஸ்லாமிய மக்களே, அவர்கள் பேரம் பேசி ஏறி உட்கார்ந்த பின் அவர்கள் படும் கஷ்டத்தை பார்க்கும் போது நாமே அதிகமாக பணம் கொடுத்து விடுவோம். அப்படி ஒரு கஷ்டமான வாழ்க்கை. படிப்பறிவு இல்லை, பத்து வருடங்களுக்கு முன்னால் நாம் பயன்படுத்திய மொபைல், அதில் கால்குலேட்டர் இருப்பது கூட தெரியாமல் பேப்பரில் கணக்கு பார்க்கும் அளவிற்கு அறியாமை. எல்லோரும் 15லிருந்து 28 வரை மட்டுமே இருந்தனர்.

எனக்கு இந்தி தெரியாது, அவனுக்கு தமிழ் தெரியாது, ஆங்கிலமும் தெரியாது. ஆனால் கோடா வாலாவுடன் இருபது கிலோமீட்டர் பயணம் செய்ய வேண்டும். அதனால் கடைசி வரை sign language மற்றும் ஜிப்ரிஸ் மொழிதான் சரியாக இருந்தது. குதிரையில், அனுபவம் மிக்க குதிரைக்கு காதில் முத்திரை குத்தப்பட்டு இருக்கும். குதிரை இறக்கத்தில் செல்லும் போது ராஜா போல் அமர வேண்டும் ஏற்றத்தில் செல்லும் போது வேலைக்காரன் போல் அமர வேண்டும்.

மூன்று இடங்களில் நிறுத்தப்பட்டது, ஒரு இடத்தில் கோடாவாலாவுக்கு டீ, பிஸ்கட் நாம்தான் வாங்கி தர வேண்டும். மற்ற இரண்டு முறை நம் உணவுக்காக நிறுத்தப்படும். குதிரைக்காரர்கள் யாரும் உணவு சாப்பிட அனுமதி இல்லை.

நடந்து சென்றதை விட குதிரையில் சென்றது தான் உடல் வலி அதிகமாக இருந்தது. எங்கு பார்த்தாலும் பனி, இடையில் பள்ளம் மேடு வரும் போது குதிரைக்காரர் பயிற்சி இல்லாத  வேறு குதிரையை பார்க்க சென்று விட்டால் நமக்கு அல்லு விட்டு விடும். வலதுபுறம் விழுந்தால் காயத்துடன் தப்பித்து கொள்ளலாம் இடதுபுறம் விழுந்தால்?

சில இடங்களில் குதிரைவாலா சொன்ன சில வார்த்தைகள் மட்டும் தெரிந்து வைத்துக் கொண்டு என்னையும் அறியாமல்
‘‘ வாச் கரோ, அரம்ஸே‘‘ என்ற வார்த்தையை பயன்படுத்தி கொண்டே வந்தேன். குதிரை பயணம் பயமாய் மாறி பாதாளம் வரை சென்று விடுமோ என்று பயந்துதான் பயணம் முடிக்க வேண்டியதாயிற்று.

1 மணிக்கு கும்பா கொண்டு வந்து விட்டாலும் மிகக் கடுமையான பயணமாகத்தான் இருந்தது..

அங்கிருந்து 3 கிமீ தூரம் நடக்க வேண்டும். முட்டி வலி கால் வலியும் ஒரு சேர கலந்து பாடாய்படுத்தியது. கோவிலின் அரை கிலோ மீட்டர் முன்னால் பேக், கேமரா, போன் என எல்லாவற்றையும் கொடுத்து டோக்கன் போட வேண்டும். ஒரு பொருளுக்கு 20ரூபாய்.

நூறு மீட்டர் தூரத்தில் ண்டணினு கழட்டி வைத்து விட்டு இரண்டு நாட்களாக சிறையில் இருந்த காலை விடுவித்து, கடல் மட்டத்திலிருந்து 12768 அடி உயரத்தில் இருப்பதால் தொடர்ந்து பேச முடியவில்லை, மூச்சு விட சிரமம்,

உடல் முழுவதும் வலி கொஞ்சம் பொறுத்து கொண்டு, பனி லிங்கத்தில் இருந்து வடியும் நீர் வழிந்து கொண்டு இருக்க, முதல் படிக்கட்டில் அடைபட்டு கிடந்த காலை எடுத்து வைக்கும் போது அதன் குளிர்ச்சி ஒட்டுமொத்த நரம்புகளுக்கும் சென்று உடம்பையே உலுக்கி எடுத்து விட்டது.

அந்த நொடி உலகையே மறந்த நிலை.... எவ்வளவு உதாரணம் கூறினாலும் அதன் ஸ்பரிசத்தை அந்த இடத்தில் மட்டுமே உணர முடியும்.

பயண முடிவுரை
பாதங்களில் பட்ட குளிர்ச்சி தலைக்கு ஏறி ஒட்டுமொத்த உடல் சூட்டையும் தணித்த பின்னர் தான் நம் கவனம் வேறு இடத்திற்கு செல்கிறது.

ஒரு பெரிய பாறையை குடைந்து விட்டாற்போல் குகை இருந்தது. குகைக்கோயில் இடதுபுறம் கொண்டு வந்த லத்தியை வைத்து விட்டு ஒவ்வொரு படிகட்டாக நகர்ந்து செல்லும் போது இடது ஓரத்தில் நடுத்தர வயது தாண்டிய பெண் போலிஸ் ''ஜெய் போல்'' என்று சொல்லிக் கொண்டே வயதானவர்களை படியேற உதவிக் கொண்டிருந்தார். வலது புறம் வரும் பிரசாதங்களை பக்தர்களிடம் அலட்சியமாக வாங்கி அந்த பக்கமாக போட்டுக் கொண்டிருந்தான் ஒரு வாலிபன். அதுவரை பார்க்க தீவிர ஆசையோடு வந்த பக்தர்கள் பாதிப்பேர் பனி லிங்கம் கண்டதும் கண்ணை மூடி வேண்டி தங்கள் தேவையை கேட்டுக் கொண்டிருந்தனர். என் பார்வையில் முதலில் தெரிந்தது சிகப்பு நிற கம்பிகள் தான், வேலி போன்று அமைக்கப்பட்டிருந்தது, அதனுள் 10 அடி தூரம் வரை பனிக்கட்டி உறைந்து கிடக்க இடையே சூலம் ஒன்று அமைக்கப்பட்டு இருந்தது பாறையின் இடுக்கில் பனிக்கட்டி முழுவதும் லிங்கமாக உருவெடுத்து இருந்தது ஆச்சரியமாக இருந்தது. கண்களை மூடாமல் அப்படியே 20 விநாடிகள் ஆச்சரியம் அகலாமல் பார்த்து கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் ''சலோ பாய்'' என்ற குரல் கேட்டு அதை விட்டு கடந்தால் பார்வதி, முருகன், கணேசன், எல்லாம் உண்டு என்று கூறியிருந்தார்கள் அப்படி எதுவும் என் கண்ணுக்கு தெரியவில்லை. ஆனால் பனி லிங்கம் இருந்த இடம் கண்கள் முழுவதும் இப்போதும் நிரம்பி இருக்கிறது.

இந்த பயணத்தின் நோக்கம் என்ன?
நோக்கமே இல்லாதது தான் இந்த பயணத்தின் நோக்கம். எந்த வேண்டுதலும் இருக்காது, எந்த  தேவையும் இருக்காது. பார்க்க ஆசைப்பட்டேன் வந்து விட்டேன்.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட இந்த வாழ்க்கையில் நல்லது, கெட்டது, நன்மை தீமைகள், கஷ்டம் நஷ்டம்,  அனுபவித்து நம்மை பக்குவப்பட்ட வாழ்க்கையாக மாற்றுவது தான் இந்த வாழ்க்கையின் அடிப்படை அமைப்பு. இது எல்லாம் அனுபவம் இந்த கடுமையான பயண அனுபவம் என் வாழ்க்கையில் பொக்கிஷம்.

இவையும் எனக்குள் கடந்து செல்கிறது அழகிய நினைவுகளாக....

இதற்கு பின்னர் நிறைய இடம் சென்றோம் ஆனால் எதுவும் அமர்நாத் யாத்திரை அளவு ஈர்க்கவில்லை.

கட்றா எனும் இடத்தில் வைஷ்ணவி தேவி கோயில் உள்ளது 40 கிமீ நடந்து சென்றோம். கோயில் தான் பிரம்மாண்டம் மற்றபடி அந்த பீல் குட் அனுபவம் மிஸ்ஸிங்.

அடுத்த நாள் சிவகோரி சென்றோம் கட்றாவில் இருந்து 72 கிமீ தொலைவில் இருந்தது அங்கிருந்து 3 கிமீ தூரம் நடக்க வேண்டும் அந்த சிவன் கோயில் வித்தியாசமான அனுபவம் ''பாறைக்குள் புகுந்து சென்று காண வேண்டும்'' அங்கேயும் சிவலிங்கம் நன்றாக இருந்தது ஆனால் அதில் நிறைய விஷயங்கள் கற்பனையாக இருந்தது.

ஜூலை 17 காலை சென்னை சென்ட்ரல் வந்தோம் வழக்கம் போல சென்னை மக்களின் சராசரி அவசர வாழ்க்கை வந்து தொற்றிக் கொண்டது. எல்லோரும் முகமன் கூறி விடை பெற்று கொண்டோம்.

இவையாவும் நல்ல நினைவுகளாக மனதில் என்றும் தொடரும்.

- விஜயகாந்த் (சென்னை)

---

## கல்விச்சாமி

கசடறுக்கும் கல்விதனைக்
கடைக்கோடி மானிடர்க்கும்
எளிதாக வாய்த்திடும்நல்
ஏற்றவழி செய்திட்டால்,
அகிலத்தைச் சிதைக்கின்ற
அருந்துயர வறுமை நீங்கும்,
ஆதிக்க கொடுமை சாகும்.

சாலையெங்கும் எரிகின்ற
சாதித்தீ ஒழிந்து
சமத்துவப் பேரொளி
சரித்திரமாய் மின்னும்.

மாண்புகள் தழைத்திடவும்
மடமைகள் அழிந்திடவும்
வானும்மண்ணும் வளம்பெறவும்
ஆணும் பெண்ணும் சமம் பெறவும்
அனைவருக்கும்  கட்டாயம்
அடிப்படை கல்விவேண்டும்.

அதிகாரச் சதிநீங்க
அநியாயம் சரியாக
இனியாரும் பணியாத
இருளுக்குள் ஒளியாத
வாழ்விற்கு வாய்க்கு வேண்டும்.

வளமானக்கல்வி நிச்சயம்
காசுக்குச் சிறப்பாக
கடமைக்குச் சிறிதாக
கலைவாணி கற்பிக்காமல்
எல்லார்க்கும் நிறைவாக வாரித்தந்து
மாற்றட்டும் புதியபூமி
போற்றிப் புகழ்வோம் கல்விச்சாமி!

- பொன். தெய்வா
ஐவேலி

# ஒளிரும் ஆசிரியர் - 4

## மொழிப்பாட வாசிப்பில் மாணவர்களை மேம்படுத்தி வரும் அசத்தல் அரசுப்பள்ளி ஆசிரியை




அரசுப் பள்ளிகள் இனி மெல்ல அழியும் என்னும் பொய்யான, போலியான பரப்புரை திட்டமிடப்பட்டு கட்டவிழ்த்து விடப்பட்டாலும் நாட்டில் கடைசி ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் புகழிடமாக விளங்கிவரும் அரசுப்பள்ளிகள் இருந்தே தீரும் எனலாம். தகவல் தொழில்நுட்ப வசதிகள் பெருகிய போதும் மாணவர்களை உருவாக்கும் நேரங்களில் ஆசிரியர்களைப் பதிவேடுகள் பலவற்றை தயாரித்திட அச்சுறுத்தப்பட்டு வருவது வேதனையளிக்கக் கூடிய கொடுஞ்செயல்களாகும். வகுப்பறையில் மாணவர்கள் சார்ந்த அடைவு ஆய்வில் மொழி வாசிப்பு தலையாயதாக இருக்கின்றது. மாணவர்களைப் படிக்கச் செய்தல் என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு உணர்வும் வகுப்பறை சார்ந்த தொடர் பயிற்சியும் மிகுந்த பொறுமையும் மிக அவசியம் ஆகும்.

அரசுப்பள்ளிகளும் அரசு உதவிபெறும் பள்ளிகளும் திடீர் நலிவுற்றதற்கும் தனியார் மெட்ரிக் பள்ளிகள் பெருக்கத்திற்கும் இன்றியமையாத காரணமாக மாணவர்களிடையே ஆங்கில மொழி வாசிப்பு உள்ளது. இதனாலேயே சாமானிய மக்களிடம் கூட ஆங்கில மோகம் தலைவிரித்தாடும் அவலநிலை காணப்படுகிறது. இந்த அறைகூவல்களை எதிர்கொண்டு தம் சிறப்பான பங்களிப்புகளை ஆசிரியர்கள் சமூகத்திற்கு அளித்து வருகின்றனர். அந்தவகையில் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், பாமணி ஊராட்சிக்குட்பட்ட தேசிங்குராஜபுரம் ஊராட்சி ஒன்றிய ஈராசிரியர் தொடக்கப்பள்ளியில் பணிபுரிந்துவரும் தலைமையாசிரியை திருமதி இரா. விஜயலட்சுமி அவர்களின் கற்பித்தல் சார்ந்த பல்வேறு பணிகள் அளப்பரியவை. இப்பள்ளியில் தற்போது 43 மாணவ, மாணவியர் படித்து வருகின்றர். தனியார் பள்ளிக்கு நிகராக இப்பள்ளி மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் வாசிப்பில்



முனைப்புக் காட்டி வருவது வியக்கத்தக்கது. வாசிப்பில் வெறும் சரளப்பண்பை மட்டும் கொள்ளாமல் புரிந்துகொள்ளும் தன்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் தருவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, ஆங்கில மொழியில் வாசிப்பை மேம்படுத்தும் உச்சரிப்பு முறை வாசிப்புப் பழக்கத்தைப் பெரும்பாடுபட்டு இவர் தம் உதவியாசிரியை ஒத்துழைப்புடன் முதல் வகுப்பு முதற்கொண்டு நிறைவேற்றி வருவது பாராட்டத்தக்கது.

எடுத்துக்காட்டாக, இப்பள்ளியில் இரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவர் ஐந்தாம் வகுப்பு ஆங்கில பாடப்புத்தகத்தைச் சரளமாக வாசித்துக் காட்டுவதை வட்டாரக் கல்வி அலுவலர், வட்டார வள மைய மேற்பார்வையாளர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர் உள்ளிட்ட பள்ளி ஆய்வு அலுவலர்கள் மனமுவந்து பாராட்டியது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இதுதவிர, இவரது தொடர் முயற்சியாலும் தன்னார்வ ஊக்கத்தாலும் உயர்தொடக்க நிலை மாணவர்களுக்கு இணையாக வட்டார, மாவட்ட அளவில் நடைபெறும் பல்வேறு கல்வி இணைச் செயல்பாடுகள் சார்ந்த தனிநபர் மற்றும் குழுவினர் தொடர்பாக நிகழும் போட்டிகளில் தம் மாணவர்களைப் பங்குபெற செய்து வெற்றி வாகை சூடி அனைவருக்கும் வியப்பை ஏற்படுத்தி வருவது பாராட்டத்தக்கது.

புத்தக வாசிப்பை நேசிக்கத் தூண்டும் புத்தகப் பூங்கொத்துத் திட்டத்தில் காணப்படும் பல்வேறு நூல்களில் இடம்பெற்றிருக்கும் சிறுவர் கதைகளை வாசித்து அவற்றை தம் சொந்த நடையில் வளரும் ’கதை சொல்லி’களாக மாறிவருவது அழகு. அதுபோல், கணிணியைக் கையாண்டு தம் கற்றலை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளுக்கு இவ் ஆசிரியை உரமூட்டி வருவதும் சிறப்பு மிக்கது. இவர் இப்பள்ளியில் தலைமை பொறுப்பு ஏற்று ஆறு ஆண்டுகளில் பள்ளி வளர்ச்சிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் வசதிகள் ஆகியவற்றை உரிய அலுவலகத்தில் தொடர் படையெடுத்துக் கோரிப்பெற்று நிறைவேற்றி வருவது என்பது ஒரு முன்மாதிரி செயல்களாகும்.



இதுதவிர, தன்னார்வ தொண்டு அமைப்பான சகாயம் அறக்கட்டளை நிர்வாகிகளைத் தொடர்பு கொண்டு கஜா கோரப்புயலில் சீரழிந்த பள்ளி மேற்கூரையினை ரூபாய் ஒரு இலட்சம் செலவில் சீர்செய்து மாணவர்கள் பாதுகாப்பைத் துரிதமாகச் செயல்பட்டு உறுதி செய்ததை பாராட்டாதவர் யாருமில்லை. ஆண்டுதோறும் குறுவள மைய அளவில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியில் இளம் விஞ்ஞானிகளுக்கான தேடல் புத்தாக்கப் படைப்புப் போட்டியில் முதலிடம், அனைவருக்கும் கல்வித் திட்டம் மூலமாக நடைபெறும் பேச்சுப் போட்டியில் ஒன்றிய அளவில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாகவும் மாவட்ட அளவில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாகளாகவும் முதலிடம் பிடிக்கும் வகையில் மாணவர்களைத் தயார்படுத்தி வரும் இவரது அளப்பரிய செயல் நினைந்து போற்றத்தக்கது.

‘‘எங்கள் தேசிங்குராஜபுரம் பள்ளிக்கு முள்ளூர் என்று மற்றொரு பெயரும் உள்ளது. நான் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்ற இந்த 6 வருடங்களில் எனது பள்ளியை பெரிதும் மாற்றியிருக்கிறேன். மாதந்தோறும் நடைபெறும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் பள்ளியின் வளர்ச்சி குறித்த ஆரோக்கியமான கருத்துக்கள் விவாதிக்கப்படும். சுத்தம் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. எங்கள் ஊர் கிராமம் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய கிராமம். இருப்பினும் எங்களுடைய அறிவுறுத்தலின்படி எங்கள் பள்ளி மாணவர்கள் அனைவர் வீட்டிலும் கழிப்பறை வசதி உள்ளது. எங்கள் பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் கழிப்பறை பயன்படுத்த தெரிந்துள்ளதை ஒரு சாதனையாக நான் கருதுகிறேன்.‘‘ என்னும் தலைமையாசிரியை திருமதி இரா. விஜயலட்சுமி ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரிய சமூகத்தில் ஓர் ஒளிரும் ஆசிரியர் என்பதில் மாற்றுக் கருத்துண்டோ?




இன்னும் தொடர்வார்கள்...

**முனைவர் மணி கணேசன்**

# ஆடி வா காவிரியே!

ஆடி வா காவிரியே,
ஆடியில் வா
காவிரியே

எங்கள் அகம் மகிழ
அசைந்தாடி வந்து விடு காவிரியே,
எங்கள் புண்ணிய நதியே

தலைக்காவிரியில் தவழ்ந்து
குடகு மலையில்
குமரியாய் வளர்ந்து
கன்னடர்களின் கைவிலங்கு உடைத்து
கற்புக் கன்னியாய்
தமிழகம் வந்து
எங்கள் நிலத்தை
குளிர்விக்க வருவாயா காவிரியே

ஹேமாவதியை தாண்டி
சிம்சா நதியை சீராட்டி
அர்காவதி நதிக்கு
அடிபணியாமல்,
கோன்னுகோல் நதியை புறந்தள்ளி
லக்சிமண தீர்த்தத்தை
லட்சியம் செய்யாமல்
கபினியை கடந்து
பவானியை பாசமாய் குளிர்வித்து
லோகபாவானியுடன்
லயணம் இசைத்து
நொய்யலை நுரைபொங்க வைத்து
அமராவதியை ஆசையாய் வருடி
தர்மபுரியை தரிசித்து
மேட்டுரை மேம்படுத்தி
சீரங்கத்தை சிறப்பாக்கி....!
தஞ்சை தரணியின் தாகம் தீர்க்க
வருபவளே!

ஆடிப் பெருக்கில்
அத்தனை சீரோடும்
ஆற்றங்கரையில்
காத்திருக்கிறோம்
உன்னை ஆராதிக்க,

ஏமாற்றாமல்
இந்த ஆண்டேனும்
வந்துவிடு,
எங்கள் வாழ்வில்..
ஏற்றம் கொடு!



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி




நவீன்
இருள்நீக்கி

# என் மகள் (கதை - பகுதி 4)

செய்திகள் உலகின் பசிக்கு அன்று நல்ல தீனி.

' சொந்த மகளை கொலை செய்த பெற்றோர். வேறு சாதி இளைஞரைக் காதலித்ததால் விபரீதம். கொலையை செய்ததாக சொன்ன குரலொலிப் பதிவு சிக்கியது.' ஒரு செய்தித்தாள் இப்படி கூறியது. சில நாட்களுக்கு பத்திரிக்கைகளில் இந்த கொலைவழக்கு பெரும்பகுதியை ஆக்கிரமித்திருந்தது.

தலித் இளைஞரைக் காதலித்ததால் பெற்ற மகளை ஆணவக்கொலை செய்து புதைத்த பெற்றோரைப் போலீசார் கைது செய்தனர். வீட்டில் புதைக்கப்பட்ட பெண்ணிண் உடலைக் கைப்பற்றி உடற்கூராய்வுக்கு கொண்டு சென்றுள்ளனர் மருத்துவக் குழுவினர். கொலை செய்ததாக சொல்லும் குரல்பதிவு மூலம் குற்றம் வெளியானது. மேலும் தலித் இளைஞர்மீது பொய்வழக்கு போடப்பட்டதும் அம்பலமானது. அவர் விடுதலை செய்யப்பட்டார்.' தொலைக்காட்சிகளில் செய்திகள் இவ்வாறு வாசிக்கப்பட்டன. நாடெங்கும் தொலைக்காட்சி விவாதங்களிலும் இணைய வலைதளங்களிலும் சூர்யா ஆணவக்கொலை வழக்கு பேசு பொருளாக மாறியது.

சூர்யா கொலை வழக்கில் மேலும் ஒரு ஆதாரம். மரண தருவாயில் சூர்யா எழுதிய கடிதம் சிக்கியது.' அடுத்த பரபரப்பு செய்திகளில் சூர்யாவின் கடிதம் இடம்பெற்றது. செய்தித்தாள்களில் கடிதத்தின் நகல் படம் பெரிதாக பிரசுரமானது.

சூர்யாவாகிய நான்,

இந்த கடிதத்தை எழுதுற இதே நேரம் என்னைக் கொல்ல வெளிய திட்டம் போடுறாங்க.

இந்த ரூம் அடச்சிருக்கு. என்னோட வலது கை முறிஞ்சிருக்கு. வீங்கி பழுத்து போச்சு. கழுத்துல மெதிச்சதால என்னால சரியா பேச முடியல. சாப்பிட முடியல. தண்ணிய கூட குடிக்க முடியாம கஸ்டப் பட்டுகிட்டிருக்கேன். தலையில தோல் பொழந்து பல நாள் ஆயிடுச்சு. ரத்தம் கசிஞ்சிட்டே இருக்கு. வலியில உயிர் பிரியிதோனு தோனுது. என் கண்ணுக்கு பார்வை சரியா தெரியல. அடிப்பட்டதுல நரம்பு பாதிச்சிடுச்சு போல. என்னால என் கால உணர முடியல. கால் பூரா மரத்துகிட்டிருக்குனு நெனக்கிறேன். இவ்வளவு வலியையும் தாண்டி நான் இந்த கடிதத்த கடைசியா எழுதுறேன். ஏன்னா இன்னும் கொஞ்ச நேரத்துல என்ன பெத்தவங்களே என்ன கொல்லப்போறாங்க. காரணம் நான் வேற சாதி பையனை காதலிச்சிட்டேங்கிறதுதான்.

பாத்து பாத்து வளத்த என் அப்பா அம்மாவே இப்போ என்னை செதச்சிக்கிட்டு இருக்காங்க. சாதிய தூக்கி புடிக்கிறாங்க. பெத்தவங்க மட்டுமில்ல. இந்த சமூகமே

இப்படிதான் இருக்கு. இது தவறு.

என்னால எழுத முடியாத நெலமையில நான் எழுதுறேன். காரணம் நான் கடைசியா சொல்ல வேண்டியது இருக்கு. எனக்கு சாதி வேண்டாம். என்னைப்போல இங்க யாருக்கும் வேண்டாம். சாதி அழியனும்.

சாதிக்காக என்னை கொல்ல நெனக்கிற பெத்தவங்களுக்கு மகளா இருக்குறத விட சாவு மேல்னு நான் நெனக்கிறேன்.

என்ன எரிப்பாங்களா பொதப்பாங்களானு தெரியல. என் மனசுக்கு புடிச்சவனோட வாழ ஆசைப்பட்டேன். வாழ்ற நாளில் எதுக்கு இந்த சாதி.?

இப்ப நான் சிந்துற ரத்தத்துக்கும் போகப்போற என் உயிருக்கும் காரணம் இந்த சாதிவெறிதான். எல்லா மனுசங்களும் சமம்னு படிச்சிட்டு சாதியோடு வாழ்றது தப்பில்லையா.?

என்னை பெத்தவங்க ரூம்ல என்னை அடச்சி வச்சி செஞ்ச கொடுமைய இதுவரை நான் கேள்விப்பட்டதில்ல. ஆனா முதல்முறையா சாதியால நான் முழுமையா பாதிக்கப்பட்டுட்டேன். இன்னும் கொஞ்ச நேரத்துல சாதிக்காக என் பெத்தவங்களே என்ன பலி குடுக்கப் போறாங்க. என்ன கொன்னுட்டு அதை யாருக்கும் தெரியாம பாத்துக்குவாங்க. ஆனா நான் சாகடிக்கப்பட்டேன்னு சொல்ல யாரும் இருக்க மாட்டாங்க. அதனாலதான், உயிர் போறதுக்கு முன்னாடி நான் இந்த கடிதத்தை எழுதுறேன். என் சாவுக்கு இதுவே சாட்சி.

இது மத்தவங்க கைக்கு கெடக்குமானு தெரியாது. ஒருவேள கெடச்சா, நியாயப்படி உரிய இடத்துல இதை சேத்திடுவாங்கனு நான் நம்புறேன்.

இங்க சாதி மாறி விரும்புறவங்களுக்கும் கல்யாணம் பண்ணி வாழ்றவங்களுக்கும் சட்டமும் நீதியும் பாதுகாப்பா அமையனும். இதுக்காகவே சட்டத்துல தனி இடம் ஒதுக்கனும். இதுதான் என் சாவுக்கான அர்த்தமா இருக்கும்.

இங்க பலபேர் சாதிக்கு சேத்தியா வாழ்றாங்க. இவங்ககிட்ட அன்பு இல்ல. அன்பு வாழனும்னா இங்க சாதியும் பாகுபாட்டு மனநிலையும் அழியனும்.

- சூர்யா

கடிதத்தில் ஒழுங்காக அமையாத எழுத்துகளும் சொற்களும் சூர்யாவின் நிலையை தெளிவாக எடுத்துகாட்டின. கடிதத்தின் படத்தைப் பார்த்த பலருக்கு அதன் உண்மை தன்மை தானே புரிந்தது.

சூர்யாவின் குரல் என்று ஒரு பெண் அக்கடிதத்தை குரல்பதிவு செய்து புலனத்தில் பகிர்ந்திருந்தாள். அதை இணைய வாழ் மக்கள் காணொளி படங்களாக உருவாக்கி

பரவலாக்கியிருந்தனர்.

சமூக செயற்பாட்டாளர்கள் பலர் ஒன்றிணைந்து கூட்டங்கள் நடத்தி தீர்மானங்கள் பல நிறைவேற்றினர். சாதி ஆணவக்கொலைக்கு எதிராகவும் சாதி கடந்து காதலிக்கின்ற, திருமணம் செய்கின்ற இளைஞர்களுக்கு பாதுகாப்பாகவும் சிறப்பு சட்டம் இயற்ற வேண்டும் என்றும் சூர்யாவின் மிஞ்சியிருக்கும் உடலை அரசு சார்பில் அடக்கம் செய்து கல்லறைத் தோட்டம் அமைத்து அதற்கு சூர்யாவின் பெயர் வைக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் முதன்மையானதாக இருந்தன. அவர்களின் கூற்றில் ஆழமான அர்த்தமிருந்தது.

நாட்கள் பல கடந்த பின்னர் ஒரு தலைப்புச் செய்தி கூறியது.

’ சூர்யா என்ற இளம்பெண்ணை ஆணவக்கொலை செய்த வழக்கில் பெற்றோருக்கு நீதிமன்றம் இரட்டிப்பு ஆயுள் தண்டனை வழங்கியுள்ளது. சாதி ஆணவக்கொலைக்கெதிரான சிறப்பு நீதிபதிகள் அமர்வு வழங்கிய இத்தீர்ப்பு இந்தியா முழுவதும் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது. மேற்கொண்டு இது சட்டமாகக் கொண்டு வரப்படவுள்ளது.’

ஒவ்வொரு ஊரிலும் நடந்த ஆணவக்கொலைகள் பற்றிய புகார்களும் வழக்குகளும் நிறைந்தன.

அனைத்தையும் நிகழ்த்திவிட்டு அமைதியாக மலர்களைத் தூவிக் கொண்டிருந்தான் முத்து. கையில் எந்த வலியுமில்லை. சூர்யாவின் கல்லறை மலர்களால் நிரம்பியிருந்தது. பலபேர் மார்புள் கல்லிலிருந்த சூர்யாவின் படத்தைக் கண்டு மெச்சிக் கொண்டிருந்தனர்.

சில நாட்கள் கழித்து சூர்யாவின் பெயரிலேயே ஆணவக்கொலைக்கு எதிரான சட்டம் நிறைவேற்றப்பட்டது.

சூர்யாவின் கல்லறை இன்று ஒரு சுற்றுலா இடமாக மாறிப்போனது. பல இளைஞர்கள் தினமும் சூர்யாவைக் கண்டு மரியாதை செலுத்தினர். அங்கு தினமும் வந்து செல்லும் முத்துவைத் தவிர வேறு யாருக்கும் சூர்யாவை நெருக்கமாக அறிந்திருக்க வாய்ப்பில்லை.

’ ஜெயிச்சிட்டமா. நீ இறந்தாலும் வாழ்ந்துட்டிருக்க. நடந்ததெல்லாம் நல்லதாவே நடந்துடுச்சி. வருங்கால தலைமுறைக்கு மிகப்பெரிய பாதுகாப்பு செஞ்சிருக்கமா.’ முத்து அடிக்கடி மனதில் நினைத்துக் கொள்வதுண்டு. அவ்வபொழுது அந்த வீட்டிற்கு சென்று வாழைமரங்களையும் பார்த்துவிட்டு வருவான் முத்து. அன்று அவன் பார்த்தபோது வாழை மரங்கள் பூக்கள் விட்டிருந்தன.

முற்றும்.

**- கார்த்தி டாவின்சி**

# ஆண் தேவதைகள்



திவ்யா வசந்தன்

வணக்கம் தோழமைகளே !

ஒரு பெண்ணாக இருந்துக் கொண்டு ஆண்களை பற்றி எழுதுவதில் மகிழ்ச்சி அடைகிறேன், ஆண் என்பவன் யார்? இந்த கேள்விக்கு ஒவ்வொருவர் பார்வையிலும் வெவ்வேறு பதில்கள் வரும். சிறு குழந்தைகளிடம் கேட்டால் ஆண் என்றால் அவர்கள் பார்வையில் அப்பாவை தான் முதலில் சொல்வார்கள், என் அப்பா மிகவும் நல்லவர் என்று சொல்வார்கள்.

அதுவே ஒரு திருமணமான பெண்ணிடம் கேட்டால் என் கணவர் மிகவும் கோபக்காரர் என்பார்கள் சிலர். சில பெண்கள் என் கணவனே எனக்கு தெய்வம் என்பார்கள். பெற்றோரிடம் தன் மகனை பற்றி கேட்டால் அவன் சோம்பேறி, உதவாக்கரை என்பார்கள். இளம் பெண்களிடம் கேட்டால் ஆண்கள் என்றாலே, ஏமாற்றுபவர்கள் என்பார்கள். இப்படி பல பேரிடம் பல பெயர்களை பெற்று கொண்டு இவ்வுலகில் வாழும் அழகான படைப்பு தான் ஆண்கள்.

அழகு என்றாலே பெண்கள் தான் என்று சிலர் சொல்வதுண்டு. ஆனால் ஆண்கள் ஒவ்வொரு பருவத்திலும் அழகாகிறார்கள். சிறுவயதில் தன் சகோதரிக்கு விட்டுக் கொடுப்பதில் அழகு, பெற்றோருக்காக தன் கனவுகளை மறைப்பதில் அழகு, மனைவி குழந்தைக்காக தன் உழைப்பை முழுவதுமாய் தருவதில் அழகு என இப்படி அனைத்து செயல்களிலும் ஆண் அழகாகிறான். ஆண்கள் அழ தெரியாதவர்கள் இல்லை, அழுகையை அடக்க தெரிந்தவர்கள். அன்பிலாதவன் இல்லை, அன்பை மனதில் வைத்து சொல்ல தெரியாதவன். வேலை தேடுபவன் இல்லை, தன் திறமைக்கான இடத்தை தேடுபவன். பணம் தேடுபவன் இல்லை, தன் குடும்பத்திற்கான தேவைக்காக ஓடுபவன். காதலை தேடுபவன் இல்லை, ஒரு பெண்ணிடம் தன் வாழ்க்கையைத் தேடுபவன். கோபக்காரன் இல்லை, நடிக்க தெரியாமல் கோபத்தை கொட்டிவிட்டு வருந்துபவன். இப்படி ஆண்களை பற்றி தெரிந்து கொள்ள புரிந்து கொள்ள நிறைய விடயம் இருக்கிறது.


அப்படி புரிந்து கொண்டவர்கள் என்றுமே அவர்களை தவறாக சொல்லமாட்டார்கள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னாடி பெண் இருக்கிறாள் என்பார்கள். அதைப்போலவே எத்தனையோ பெண்கள் வெற்றிக்கு பின்னாடி ஆண்களின் தியாகம் இருக்கிறது என்பதே உண்மை.

ஆண் என்ற இரண்டு எழுத்து ஒவ்வொரு பெண்கள் வாழ்விலும் பிறப்பு முதல் இறப்பு வரை ஏதோ ஒரு உறவில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும். பெண்களுக்கு

காவலாக ஆண்கள் எப்போதுமே இருப்பார்கள். அதனால் தான் என்னவோ, காவல் தெய்வங்களாக ஆண் தெய்வமே அதிகமாக இருக்கிறது. ஆண் என்பவன் என்றுமே நமக்கு துணையாக இருப்பவன், அவனை புரிந்து கொண்டு நேசிப்போம்.
ஆண் என்பவனுக்கு நம் தமிழ் மொழியில் பல சிறப்பு பெயர் உண்டு.
பாலன் என்ற பெயர் 1 முதல் 7 வயது வரை, மீளி என்ற பெயர் 8 முதல் 10 வயது வரை, மறவோன் 11 முதல் 14 வயது வரை, திறவோன் 15 வயதில், விடலை 16 வயதில் காளை 17 முதல் 30 வயது வரை, முதுமகன் 30 வயதிற்கு மேல்.
இப்படி பல சிறப்பு பெயர்களை கொண்ட ஆண்களை கோபக்காரன், உதவாக்கரை, சோம்பேறி, பொறுப்பற்றவன், நம்பிக்கையற்றவன் என்று பெயரிடுவது நல்லதல்ல. ஆண் தேவதைகளை நேசிப்போம் ஆண்களை மதிப்போம்.

--

திவ்யா வசந்தன்
மன்னார்குடி



ஓவியம் கிறிஸ்ட்
(அகத்தை பார்க்காமல் புறத்தை பார்க்கவும்)

# சோழ தேசமும் பெருவுடையாரும்!



விஜயவர்மன்

கி.பி 1200-1300 கால கட்டங்களில் சோழ பேரரசு வீழ்ச்சியடைகிறது. பாண்டிய மன்னனின் ஆணைக்கிணங்க தஞ்சை நகரம் தீக்கிரையாகிறது. வேளாண் நிலங்களில் பேய் கடுகு எனும் விச தாவரத்தின் விதைகளை விதைக்கின்றனர். தஞ்சை கோவிலை தவிர மற்றவை அனைத்தும் சுவடின்றி அழிக்கப்படுகிறது.

தோராயமாக கி.பி. 1264 முதல் 1886 வரை தஞ்சையில் வாழ்ந்த மக்களுக்கு ராஜ ராஜ சோழன் என்ற மன்னனை பற்றி முற்றிலும் தெரியவில்லை. இயற்கை பேரிடர்களை தாண்டி கம்பீரமாக நிற்கும் கற்றளியை வழங்கியவனை தமிழினம் மறந்து விடுகிறது. கி.பி. 1886-ஆம் வருடம் ஜெர்மனியை சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர் ஹூல்ச் (Hultzsch) தஞ்சை பெருவுடையார் கோவிலின் கல்வெட்டுகளை படித்து, ஆராய்ந்து, அறிக்கையாக வெளியிடுகிறார்.

பல வருடங்கள் கழித்து ஒரு மன்னனை பற்றி பலர் பேச தொடங்குகிறார்கள். மற்ற மன்னர்களை போன்றே ஆட்சி செய்த சாதாரண மன்னர்தாம், இருப்பினும் அந்த ஆட்சி முறையில் சில வேறுபாடுகள் அம்மன்னரை வேறுபடுத்திக் காட்டுகிறது. அப்படி என்ன வேறுபடுத்திக் காட்டினார் அந்த அரசர்.?

கி.பி. 1000-த்திற்கு முன்பே பெருவாரியான வேலைகள் முடிக்கப் பெற்ற தஞ்சை பெரிய கோவில் தான் பின்னர் கட்டப்பட்ட பல கோயில்களின் முன்னுதாரணம் தம் நாட்டு மக்களின் மீது விதிக்கப்பட்ட வரியிலிருந்து ஒரு ரூபாய் கூட இக்கற்றளி எடுப்புவிக்க உபயோகப்படுத்தப்படவில்லை. கோவிலை எழுப்ப பயன்படுத்தப்பட்ட நிதி முழுவதும் எதிர் நாட்டில் போர் செய்து வெற்றி பெற்று கொண்டு வரப்பட்ட உபரி வருமானம் மட்டுமே. (இதற்கு மாறாக, தன் நாட்டு மக்கள் மீது வரி விதித்து கோவில் எழுப்பும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியிருந்தால், அதற்கு பின் வாழ்ந்த மக்களும் அவதியுற்று வாழ நேர்ந்திருக்கும்). போர் செய்து ஈற்றப்பட்ட பொருள் இறைவனுக்கே என்னும் நியதி இங்கே உருவகம் பெற்றது.

நன்கொடையும், ஆவணப்படுத்துதலும்:

கோயில் கட்டுவது முழுவதிலும் எதிர் நாட்டிலிருந்து கொண்டுவந்த செல்வங்கள் பயன்படுத்தப்பட்டாலும், சிலைகளும், ஒவ்வொரு சிலைக்கும் பல லட்சம் மதிப்பிலான ஆபரணங்களும் சோழ நாட்டு அரசிகளால் நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. நன்கொடை அளிக்கப்பட்ட சிலைகளின் அளவு, அதன் உயரம், கனமான சிலைகளா (Solid) அல்லது வெற்று சிலைகளா (Hollow) என்பதும் தெளிவாக கல்வெட்டுகளில் எழுத்தப்பட்டுள்ளன.

யாம் எடுப்பித்த இக்கற்றளிக்கு தாம் குடுத்தனவும், தம் அக்கன் (குந்தவை) குடுத்தனவும், தம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும், கல்வெட்டினில் பொறிக்க என்ற கல்வெட்டு வரலாற்று சிறப்பு வாய்ந்தது.



ஆவணப்படுத்துதல் எவ்வளவு முக்கியமென்பதை இக்கல்வெட்டு குறிக்கின்றது. காரணம், சோழ அரசிகளால் 80 முதல் 85 சிலைகள் வரை நன்கொடையளிக்கப்பட்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவற்றில் 2 சிலைகள் மட்டுமே இப்பொழுது கோவிலில் உள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால், அந்த 2 சிலைகளுமே மற்ற சிலைகளை போல 50 வருடங்களுக்கு முன்னர் திருடப்பட்டுவிட்டது.

குஜராத் மாநிலத்தில் ஓர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த அந்த சிலைகளை மீட்க உதவிய ஆவணம் எது தெரியுமா.? தஞ்சை கோவிலின் தென் மேற்கு மூலையில் அமைந்திருக்கும் விநாயகர் சன்னதியின் அருகே பொறிக்கப்பட்ட கல்வெட்டை கொண்டு தான் ராஜ ராஜ சோழனின் சிலையையும், லோகமாதேவியின் சிலையையும் திரு. பொன் மாணிக்கவேல் மீட்டு கொடுத்தார். ஆவணப்படுத்துதல் எவ்வளவு முக்கியம் என்பதை அன்றே உணர்ந்திருந்தது வியப்பு.



ஆளுமையும், வெளிப்படைத்தன்மையும்:

தென் மேற்கு மூலையில் அமைந்துள்ள விநாயகருக்கு நாள் ஒன்றுக்கு 150 வாழைப்பழங்கள் நெய்வைத்தியத்திற்கு வழங்கப்பட்டதாக கல்வெட்டுகள் கூறுகின்றன. அதற்காக 360 காசுகள் கோவில் கருவூலத்திற்கு நன்கொடையளிக்கப்பட்டது. அதனை 120, 120, 60, 60 என 4 பெரு வணிகர்கள் வட்டிக்கு வாங்கியதாகவும், அதற்கு ஈடாக 50, 50, 25, 25 என மொத்தம் 150 வாழைப்பழங்கள் வழங்கப்பட்டதாகவும், அதனை போலவே கற்பூரம், நெய், எண்ணெய் என பல பண்டங்களும் பெரு வணிகர்கள் வழங்கிய



வட்டியினால் நன்கொடையளிக்கப்பட்டதாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

எவ்வளவு வட்டிக்கு, எவ்வளவு பழங்கள் ஈடாக வழங்கப்பட்டது என்பதை கொண்டு, ஒரு பழத்தின் விலை எவ்வளவு என்பது நிர்ணயிக்கப்பட்டது. சந்தையில் அதற்கு மிகுதியான விலையில் பழம் விற்கவோ, வாங்கவோ கூடாது என்பது எழுதப்படாத சட்டமாக கடைப்பிடிக்கப்பட்டது.

கருவூலத்தில் கடன் வாங்கி வட்டி செலுத்துவதை பெருமையாக நினைத்ததால், வணிகர்கள் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தனர். இதனால், ஏழை, எளியவர்களிடம் எந்த நங்கொடையும் பெற வேண்டிய கட்டாயமும் ஏற்படவில்லை. மாறாக, பொருட்களின் விலை நிர்ணயமும் வெளிப்படையாக மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

ஜனனாயகமும், மக்களாட்சியும்:
பெருவுடையார் கோயிலை பாதுகாக்க 118 காவலர்கள் நியமிக்கப்பட்டதாக வரலாற்று சுவடுகள் எடுத்துரைக்கின்றன. ஆனால், ஒருவருக்கு கூட கோயில் நிர்வாகம் ஊதியம் வழங்கவில்லை. 118 கிராமங்களிலிருந்து கிராமத்திற்கு ஒருவர் வீதம் அந்தந்த ஊர் சபை பொறுப்பேற்று, அவர்கள் குடும்பத்திற்கு ஊதியமும் வழங்கி காவலர்களை அனுப்பிவைத்துள்ளனர். கிராமங்களும், ஊர் சபைகளும் சிறப்பாக விளங்கியதற்கு இதுவே மிக சிறந்த எடுத்துக்காட்டு.


அவ்வாறு இரவு பகலாக கோவிலை காத்த 118 வீரர்களின் சிலைகளும், கோவிலின் வெளிப்புறத்தில் செதுக்கப்பட்டுள்ளன. சிவன், விஷ்ணு, அர்ஜுன தபசு, மீனாட்சி, கண்ணப்பிரான், புத்தர் என அனைவரும் சிலைகளும் செதுக்கப்பட்டுள்ளதை காணும் பொழுது மத நல்லிணக்கத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதை உணரலாம். நிதர்சனத்தில், அந்த ஆட்சி காலம் பொற்காலம் தான்.

---


பின்னூட்டம்:

தஞ்சை பெருவுடையார் கோவிலின் ராஜ கோபுரம் முழுவதும் பொன் தகடுகளால் அலங்கரிக்கப்பட்டதாகவும் காண்பதற்கறிய காட்சியாக தஞ்சை கோவில் சிறந்து விளங்கியாதாகவும் வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமிழினம், தமிழன் என்று இனப்பற்று கொண்டு பேசும் நம்மவர்கள் தான் அதனை இருண்ட காலம் என்று பரப்புரை செய்கின்றனர்.

வரலாற்று சுவடுகளை ஆராய்ந்து பார்த்தால், பாண்டியர்கள் தஞ்சையை தீக்கிரையாக்கி வெறும் கூடாய் அக்கற்றளியை விட்டு சென்றுள்ளனர் என்பது புலனாகிறது. ஆனால், மராத்தியர்களும், நாயக்கர்களும், ஆங்கிலேயர்களும் அக்கோவிலை வருங்கால தலைமுறையினருக்காக போற்றி பாதுகாத்து வந்துள்ளனர்.



நுழைவு வாயிலில் நாம் காணும் நந்தியும், கிழக்கு கோபுரம் வழியாக சன்னதி செல்லும் படிக்கட்டும் மராத்தியர்களால் கட்டப்பட்டது. சோழர் காலத்தில் நிறுவப்பட்ட நந்தி, ராஜ ராஜ சோழன் வாயில் என்றழைக்கப்படும் தெற்கு வாயிலின் அருகே, இடது புறமுள்ள வராகி அம்மன் சன்னதி அருகில் வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு வாயிலின் சுவற்றில் உள்ள கல்வெட்டுகள் மறையாதிருக்க, படிக்கட்டுகளின் அடியில் அந்த இடத்தில் மட்டும் சிறிய குகை போன்ற வடிவமைப்பை மராத்தியர்கள் கையாண்டுள்ளனர்.



ராஜேந்திர சோழன் வாயில் என்று கூறப்படும் வடக்கு வாயிலின் நிலை மாடத்தில் A.R.P பாதுகாப்பிடம் என்று எழுதப்பட்டதை இன்றளவும் காண இயலும். எந்தவொரு சூழ்நிலையிலும் வான் வழி தாக்குதல் நடத்த கூடாது என்பதற்காக Air-Raid Precautions பகுதியாக ஆங்கிலேயர்கள் அறிவித்ததன் குறிப்பு தானது.



இக்கற்றளியின் வட மேற்கு மூலையில் அமைந்துள்ள முருகன் சன்னதி நாயக்கர்களால் கட்டப்பட்டது.
கடமைக்காக ஒரு சன்னதியை கட்டாமல், ராஜ ராஜ சோழனின் பெருமைக்கு அணிகலன் சேர்க்க விரும்பிய அவர்கள் ஒரு பேனாவின் அளவை விட சிறிய சிற்பங்களை வடிவமைத்ததுடன், அந்த சன்னதியின் பின்புற சுவற்றில் 3 மி.மீ விட சிறிய துவாரங்களை கொண்ட அலங்காரங்களை பரிசளித்துள்ளனர்.



முன்னரே கூறியது போல், ஜெர்மனிய தொல்லியல் ஆய்வாளர் தான் ராஜ ராஜ சோழனை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தினார். வேற்று நாட்டவர்கள் நம்மை அழிக்கவில்லை, பல நூறு வருடங்கள் சேர, சோழ, பாண்டியர்களாய் நாம் தான் நமக்குள் பகைமூட்டி அழிந்து வந்துள்ளோம். வரலாற்றின் மூலம் பாடம் கற்காமல் இன்றளவும் சாதி, சமுதாய பேதங்களால் அடித்து கொண்டு வாழ்ந்தால், வரலாற்றின் சுவடுகளிலிருந்து நாம் அழிக்கப்படுவது உறுதி.

**- விஜயவர்மன்**

(அழிவின் விளிம்பில் உள்ள மன்னையின் மண்ணின் நாட்டுப்புற பாடல்களைத் தொகுக்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டு வரும் மேலகண்டமங்கலம் பள்ளி மாணவ, மாணவியர் சேகரித்த படைப்பு இது)

எங்க கண்ணே,
நீ கண்ணுறங்கு.
நீ அழுதா பொழுதுறங்கு.
ஏ வெள்ளி ஆட்டுக்குத் தொட்டிக்கட்டி
நிறுத்தாட்டுங்கோ தாதியளா!
ஏ தங்கத்தாருக்குத் தொட்டிக்கட்டி
இழுத்தாட்டுங்கோ தாதியளா!
ஏ மல்லிகையே முள்ளரும்பே
மலராத காயரும்பே!
மலர்ந்து மணக்குதம்மா மாரியம்மன் கோவிலிலே!
செவந்து மணக்குதம்மா செல்லியம்மன் கோவிலிலே!
பாலு அடுப்பிலே
பாலகனும் கையிலே
பாலை எறக்குவனா?
பாலகனைத் தூக்குவனா?
சோறும் அடுப்பிலே
சூரியரும் கையிலே!
சோறை எறக்குவனா?
சுந்தரனைத் தூக்குவனா?
சிட்டி தலைவாணியா
சின்ன மவ கச்சேரியா?
புள்ளி தலைவாணியா?
பெரிய மவ கச்சேரியா?
தங்கக் கொடைப் புடிச்சு
சூரியனுவராரே!
வெள்ளிக் கொடைப் புடிச்சு
சந்திரனுவராரே!
எங்க கண்ணே நீ கண்ணுறங்கு!

பாடல் பாடியவர்:
**கோ.பத்மா**, மேலகண்டமங்கலம்.

பாடக் கேட்டு எழுதியவர்:
**ச.இராஜேஸ்வரி**, எட்டாம் வகுப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மேலகண்டமங்கலம்.

# இன்றே கடைசி

என் மரணம் குறித்த
செய்தியை
உங்களிடம் நான்
சொல்லியாக வேண்டும்.
அறிமுகமற்றவர்கள்
தெரியாதவர்களைப் பற்றி
எனக்குக் கவலையேதுமில்லை.

உறவுக்காரர்கள்
நெருக்கமானவர்களுக்கு
என் மரணம் குறித்து
சொல்லவேண்டிய
கட்டாய கடமையொன்று
உள்ளது.

என் மரணம் குறித்த
செய்தியால்
நீங்கள் பாதிக்கப்படலாம்.
எனக்காக வருந்தி
கண்ணீர் சிந்த நேரலாம்.
அவ்வமயம் உங்களுக்கு
ஆறுதல் சொல்லி
தேற்றமுடியாது என்னால்.

பிணமான எனக்கு
மாலைகள் சூட்டி
மரியாதை செய்வீர்கள்.
அந்நேரம் எவ்வித
ஆட்சேபனையுமின்றி
என் சவமும் மாலைகளை
சுகமாய் சுமக்கும்.
அது உங்கள்
இறுதி மரியாதையென்று
ஏற்றுக் கொள்ளத்தான்
செய்வேன்.

கடைசியாக
மீண்டுமொருமுறை
என்னை உற்று
நோக்கிக் கொள்வீர்கள்.
சிலர் பார்வையில்
கருணையும்,
ஒருசிலர் பார்வையில்
கோபமும் வழியலாம்.
நானிழைத்த நன்மைகளுக்கு
சிலர் போற்றவும்
நானிழைத்த துரோகங்களுக்கு
ஒருசிலர் தூற்றவும்
செய்யலாம்.

இன்றே கடைசி,
இறுதிச் சடங்கு முடிந்து
இடுகாடு செல்லும் வரை
கால அவகாசமுள்ளது.
போற்றுவார் போற்றவும்,
தூற்றுவார் தூற்றவும்
செய்திடுங்கள்.
நானில்லாத பின்னாளில்
என்னைப் புகழ்ந்து
வாழ்த்திடவும்,
வாய்க்கு வந்தபடி
சபித்திடவும்,
செய்யாதீர்கள்.



பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
அலைபேசி: 9443139353.

# நடுகல்

## பளியர் பொடவு:



திருச்சி பார்த்தி

பளியர்கள் மலையின் உச்சிப்பகுதியில் வசிப்பதனால் அங்கு இயற்கையாகவே நிறைய குன்றுகள் அமைந்துள்ளது, அரிமிதையன் காலத்தில் அவர்கள் நிலையாக குடியிருப்பில் தங்கியிருந்தாலும், நெடுங்கால முன்பெல்லாம் இயற்கையான குகைத்தளங்களிலேயே தங்கள் குடியிருப்பையமைத்தனர். வனவிலங்குகளின் தாக்குதலுக்கு பயந்து உயரமான இடத்தில் தங்கினர். மழைக்காலமானது மற்ற திணைகளை காட்டிலும் குறிஞ்சிப்பகுதியில் மிக அதிகமாய் இருக்கும். அச்சமயங்களில் குகைத்தளத்தை விட்டு வெளிவருவது சிரமம். அச்சமயங்களில் பாறைகளில் இயற்கையாய் வடிந்துவரும் செஞ்சாந்துகளை சேகரித்து குகைத்தளத்தில் இருந்துகொண்டு அன்றாடம் தான் பார்க்கும் நிகழ்வுகளை ஓவியங்களாய் தீட்டிவைப்பர். அவ்வோயியங்களுக்கு இன்னபொருள் என்பதை பளியர்களாலேயே கூற இயலாது. எனவே அதுபோன்ற இடங்கள் நிறைந்த பகுதிகளை ✸பொடவு✸ என அழைப்பர்.

இத்தகைய பளியர்பொடவுகள் நிறைந்த வனத்தில் யானைக்கு வைத்த பொறியில் சிக்கிக்கொண்டனர் அரிமிதையனும், நாகந்தையும். முதலில் நாகந்தை யானையின் மீது அழுத்தம் கொடுக்காது பக்கவாட்டில் ஏறி அருகே கிடந்த நுனாமரவேரை பிடித்து மேலேயெழுந்தான். பின் பதட்டத்தில் அரிமிதையனின் நினைவு வர, அழுதவாறே கூக்குரலிட்டான். முதுவன்கள் அருகே வந்துவிட்டனர், பின் ஒருவாறு பளியர்களை அருகே அழைத்து விவரம் கூறி உதவ வேண்டினர்.

யானையின் தந்தங்களுக்கிடையே மாட்டிக்கொண்ட அரிமிதையனின் இதயத்துடிப்பு பலமடங்கு எகிறியது. உடலையசையாது, மூச்சுக்காற்றைக்கூட மெலிதாக வெளியேற்றினான். யானைவெளிவிடும் வெப்பமூச்சு அரிமிதையனை கலவரப்படுத்தியது. முதுவனும், நாகந்தையும் காவல்காக்க பளியர்கள் விறுவிறுவென பழக்கப்படுத்திய யானையை துணைக்கு அழைக்க ஓட்டமெடுத்தனர். உடல் மரத்துபோய் சக்திகள் அனைத்தும் இழந்தவனாய் அரிமிதையன் இருந்தான். கிட்டத்தட்ட அதே நிலையில்தான் அந்த யானையும் இருந்தது. மேலே பழகிய யானை பிளிரச்செய்து மயங்கிய யானையை எழுப்ப முயற்சித்தனர். ஒருவாறு நீண்டநேரம் கழித்து மெல்ல கண்விழித்தது. தன் எதிரே ஒருவன் தந்தத்தை பிடித்தவாறு இருக்க கடும்கோபத்தில் எழும்ப முயற்சித்தது, ஆனால் உடல் ஒத்துழைக்காததால் சரிந்தது. தன்னைப்போலவே எதிரேயுள்ளவனும் உடல்தளர்ந்து காணப்பட்டதால், துதிக்கையால் அரிமிதையன் தலையில் நீவியது. பின் மேலேயோர் யானை தன்னை அழைத்தது, அதற்கு கேட்டது. (பொறு! இம்மானிடனை மேலேயேற்றிவிடுகிறேன், இவன் என்னைவிட பரிதாபமாய் உள்ளான், இவனையும் சேர்த்து மேலேற்றிவிடு நான்

உதவுகிறேன் என தன்பிளிறலில் மேலேயுள்ள யானைக்கு குறிப்பாய் உணர்த்தியது) அரிமிதையனை அலேக்காக தன் துதிக்கையில் வளைத்து சிரமப்பட்டு எழும்பி தலைக்குமேலே தூக்க, அதை லாவகமாய் மேலேயுள்ள யானை வாங்கி கீழே இறக்கியது.  கீழே விழுந்ததும் மயங்கினான் அரிமிதையன்.

கீழே யானைக்கூட்டம் அதிகம் வர ஆரம்பித்ததால் பளியர்கள் அரிமிதையனை பழக்கிய யானை மேலேற்றி கொஞ்சம் உயரம் குறைந்த ஓர் பொடவில் அரிமிதையனை கிடத்தினர். சிலநேரம் ஓய்விலிருந்த அரிமிதையன், பின் கண்விழித்தான், அதற்குள் அவனுக்கு முயற்கறி பிரட்டலும், மூங்கிலரிசி உணவும் தயாராகி இருந்தது. மேலேயுள்ள போடவில் உணவருந்திக் கொண்டே கீழே பார்த்தான்.

அதற்குள் ஓர் யானைக்கூட்டமே அங்கு வந்து துதிக்கையை மேலேயுயர்த்தி கடும்கோவத்தில் பிளிறியது. அந்த பிளிறலின் எதிரொலி அரிமிதையன் அருந்தும் உணவினை ஆட்டம் காண செய்தது.

பழக்கிய யானைக்கூட்டங்களுடன் பழியர் விரைந்தனர். முதலில் சூழ்ந்திருந்த யானைகளை விரட்டினர். பின் குழியருகே ஓர் சரிவினை வெட்டி யானையை மீட்டு, தங்கள் கூடாரத்திற்கு அழைத்து சென்றனர். இக்காட்சிகளை மேலேயிருந்தவாறு கவனித்து கொண்டிருந்தான் அரிமிதையன், பின் ஓர் கொட்டிலில் யானையை சிறை வைத்தனர். சிலநாட்கள் செல்ல..

ஓர் பளியன் தினமும் யானைக்கு உணவளிக்க, அவன்பால் யானை அன்பு செலுத்த ஆரம்பித்தது, பின் அவன் வசம் யானை செல்ல பழக்கப்பட்ட யானைக்குழுவில் மற்றுமொரு யானையாக அந்த யானையும் இணைந்தது. பளியருடன் தங்கிய நாட்களில் யானையிடம் பேசும் சில பாஷைகளையும் கற்றுக்கொண்டான் அரிமிதையன், பின் பழக்கப்பட்ட யானைகளை விற்க பளியர்போல் வேடமணிந்து யானை விற்பனைக்கும் சென்று வந்தான். உயிரைபணயம் வைத்து பிடிக்கும் யானைகளை மிக குறைந்த விலையில் வாங்குவதையெண்ணி வருந்தி, அவர்களுடனையே பயணித்தான். மெல்ல, மெல்ல அவர்களின் மருத்துவ அறிவையும், யானைகளின் குணநலன்களையும், பற்றி தெளிவாக எளிதில் கற்றான். கிட்டத்தட்ட அம்மக்களுடையே வாழ்ந்து அவர்களின் நம்பிக்கையை பெற்றனர் நண்பர்கள் இருவரும். பளியர்களை தம் படைகளில் சேர்த்துக்கொள்வதாகவும், உரிய நேரத்தில் தகவல் வருமென உறுதியளித்து, மலைகளில் இறங்க ஆயத்தமாயினர். ஆனால் பளியர்கள் தங்களது ரகசிய வழியான ✸பழையாள் பாதை✸ யை அரிமிதையனுக்கு அழைத்துச்சென்று காட்டி தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். இவ்வழியே இறங்க முதுவன்களை அவர்கள் அனுமதிக்கவில்லை. வழியெங்கிலும் எலும்பும், இரத்தவாடையும் நிரம்பிய பாதையில் இறங்க ஆரம்பித்தனர் நண்பர்கள் இருவரும், வழித்துணையாய் அனுபவம் நிறைந்த பளியன் ஒருவனும் உடன் சென்றான்.

– திருச்சி பார்த்தி

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

+91 8220567322

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    Thiravukolmagazine